# "அரசியலில் பொலிஸார் ஈடுபடக் கூடாது"

Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

மலர் 12
இதழ்: 51
தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49
போன்: 389

யாழ்ப்பாணம் பங்குனி 20 முஹர்றம் 24 வியாழக்கிழமை [2-4-70]

புதுவருட மலிவு விற்பனை

23-3-70 தொடக்கம் 13-4-70 வரை
உங்கள் பண்டிகையைச்
சிறந்த முறையில் சிக்கனமாகக்
கொண்டாட விஜயம் செய்யுங்கள்

சாறிஎம்போறியம்
(சேலைவகைகளுக்குப் பிரதானமானவர்கள்)
124, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 418. தந்தி: சாறிஸ்.

## வடபகுதி பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

'பொலிசார் அரசியலில் ஈடுபடுதல் தடுக்கப்பட்டுள்ளது. எந்தபொலிஸ்அதிகாரியாவது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவோ அல்லது அரசியலுக்குச்சாதகமானசெயல்களில் இறங்கியதாகவோ எனது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அவர்மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்'

வடபகுதி பொலிஸ் அதிபதி திரு. ஆர். சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு வடபகுதி பொலிசாருக்கு தேர்தலையொட்டி விடுத்த அறிக்கையொன்றில்எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

பொலிஸ்அதிபர் மேலும் அந்த அறிக்கையில்தெரிவித்துள்ளதாவது;- மார்ச் 25ந் திகதி ஆட்சிமன்றம்கலைக்கப்பட்டதிலிருந்து பொது தேர்தல் முடியும்வரையுள்ள காலப்பகுதியில் பொலிசாரின் பொறுப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது இந்தக் காலப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவது பொலிசாரின்பொறுப்பாகும் தங்களுக்குக்கிடைக்கும் சம்பவங்கள் குறித்து பொலிசார் பாரபட்சமற்ற முறையில்செயலாற்றவேண்டும் பொலிசார் நேர்மையாக பாரபட்சமற்றமுறையில் அச்சமின்றி கடமையாற்றுவார்களாஞல் அடுத்த 2 மாதங்களிலும் ஒருவித அசம்பாவிதங்களும்நிகழாது என நாம் நிச்சயமாக நம்பலாம்

சண்டித்தனம் காடைத்தனம் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள்மீது பொலிசார் சரியான நடவடிக்கை எடுத்து உறுதியாக நடந்து கொள்ளவேண்டும்.

# 'அரசியல் சண்டியர்'களை பொலிஸார் கண்காணிப்பர்

## இன்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மகாநாடு

(நமது அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணம், வியாழன்

**அரசியல் கட்சி ஆதரவாளர்களாகவுள்ள 'சண்டியர்களை' பொலிசார் கண்காணித்து வருவார்கள்.பொது இடங்களில் ஒழுங்கீனமாக நடப்பவர்கள் மீதும் தேர்தல் கூட்டங்களை குழப்ப முயற்சிப்பவர்கள்மீதும் சந்தை, தேநீர் கடை, பஸ் நிலையம் மற்றும் பொது இடங்களில் கூட்டமாக நின்று குழப்பம் விளைவிக்க முயற்சிப்போர் மீதும் பொலிசார் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்கள்.**

வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார் ... தேர்தல் நடக்கவிருக்கும் 2 மாத கால ... என்ன சிறிய சம்பவம் நடந்தாலும் அதுபற்றி ... குறுக்கிட்டுசெய்து கூச்சல் ... மதுபானம் அருந்திய நிலையில் காணப்படுகிறவர்களும் ...

## "சமயங்கள் பலவானுலும் இறைவன் ஒருவனே"

### விஸ்வமடு விவசாய முகாம் ஆண்டு விழாவில் பௌத்த குரு

விஸ்வமடு, புதன்

''சமயங்கள் பல இருக்கலாம். ஆனல் மனிதர்கள் எல்லோரும் வணங்குவது இறைவன் ஒருவனைததான். உத்தியோகம் வகிக்குமொருவன் தனது உத்தியோகத்திலேயே கவனம் செலுத்தி செயல்படுவானேயாஞல் நிச்சயம் அவன்தனது உத்தியோகத்துறையில் வெற்றி காணமுடியும் இதேபோன்று மனிதன் ஒவ்வொருவனும் தனது ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை வழிபட்டால் நிச்சயம் அனுக்கு இறைவனின் அருள்கிடைக்கும் சமயமென்பது மனிதனைத் தூய்மைப்படுத்தும் சாதனமென்றும், இறைவனை மனிதன் வழிபட சமயம் இன்றியமையாதது சமய வழிபாட்டில் ஈடுபட்டால் தான் மனிதன் மனிதஞக வாழமுடியும் என்பதை எமக்கு முன்னே வாழ்ந்த பல பெரியார்கள் எடுத்துக்காட்டியிருக்கின்ருர்கள் எனக் குறிப்பிட்டார்.

பலசமயத்தலைவர்களும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். விஸ்வமடு விவசாயப்படையினரால் விஸ்வமடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் ...

## சின்னங்கள் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட பழைய மணிகள், நாணயங்கள் உள்ள தகதூபியா (டகோபா) தமிழ் பௌத்தர்களால் பாவிக்கப்பட்டனவையாக இருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

வர்ண வேலைப்பாடுகள் கொண்ட இந்தப் புராதனச் சின்னங்கள் தற்போது யாழ்ப்பாணம் நூதனசாலையில் திருத்தி அமைக்கப்படுகின்றன. கந்தரோடையில் அகழ்வு வேலையில் ஈடுபட்ட ஆராய்ச்சியாளர்கள் பழங்காலத்து நாணயங்களைக் கண்டுபிடித்திருந்தனர். கந்தரோடையில் தமிழ் பௌத்தர்கள் அக்காலத்தில் வசித்திருக்கிருர்கள் என்பதற்கு இவை சான்று பகருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்,

(கு. வி. ம.)

### வட பகுதி அசைஸ் விசாரணை

## துவக்கை நீட்டி சுட்டதைக் காணவில்லை

யாழ்ப்பாணம், வியா

'நாகலிங்கம் பற்றைக்குள் நின்று சுட்டார். சுட முன்னர் அவரைக் காணவில்லை. சுட்டபின் பார்த்தேன் சுட்டுவிட்டு ஓடிஞர்கள். துவக்கு நீட்டி சுட்டதைக் காணவில்லை.'

வவனியா கொலை முயற்சி வழக்கில் எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் குறுக்குவிசாரணை செய்கையில் ஐயம்பிள்ளை விக்கிரமசிங்கம் மேற்கண்டவாறு கூறிஞர்.

வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி ஜி வீரமந்திரி முன்னிலையில் நேற்று இவ்வழக்கு இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் வவனியாவில் 68-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி கதிரவேலு நாகலிங்கம், கதிரவேலு தர்மலிங்கம் வேலுப்பிள்ளை பாலசிங்கத்தைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன் ஆஜராஞர். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் எல் டி குருசாமி ஆஜராஞர்.

எதிரிகளின் வழக்கறிஞர் கே வி எஸ் சண்முகநாதன் ... விசாரணை செய்தார்.

வழ: நீர் பாலகிங்கத்துடன் கூடித்திரிவது உமது தகப்பஞருக்கு விருப்பமில்லை?-ஆம்.

வழ: தகப்பஞரை சுடப்போனதாக பாலசிங்கம் முறைப்பாடு கொடுத்திருந்தார்?-ஆம்

வழ- அது ஒரு பொய் முறைப்பாடு?- தெரியாது?

வழ: கீழ்கோர்டடில் அப்படி ஒரு முறைப்பாடு செய்திருந்தால் அது பொய்யாகுமென்கிறீரா?-ஞாபகமில்லை.

வழ: நீர் ஓடிக் கொண்டிருந்த சயிக்கிள் பாலசிங்கத்திற்கு சொந்தமா?- சகோதரருக்கு,

வழ: துவக்கு நீட்டிச்சுட்டதைக் கண்டீரா?-இல்லை

வழ: டிராக்டர் சாரதியிடம் எதிரிகள் ஓடியதாக கூறினீரா?-இல்லை.

வழ: முறைப்பாடு சொல்லும்படி கூறினீரா?- இல்லை

பொலிசாருக்கு எப்ப முறைப்பாடு கொடுத்தீர்?- அன்றிரவு.

வழ: நீரும் பாலசிங்கமும் பரிசுத்தமகாராசாவை சந்தித்தீர்?-ஆம்.

வழ: இச்சம்பவம்பற்றிக் கதைத்தீர்?-ஆம்.

மகாராசா வல்லிபுரம் செல்வரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணைதொடர்து நடைபெறுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தனது ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை வழிபட்டால் நிச்சயம் அனுக்கு இறைவனின் அருள்கிடைக்கும்

விஸ்வமடுவிவசாயப்படை முகாம் ஈராண்டு பூர்த்தி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய கிளிநொச்சி, லும்பினி விகாரை பௌத்த குரு குறிப்பிட்டார்.

வைபவத்தில் கலந்து கொண்டு சைவக் குருக்கள் உரையாற்றுகையில் கடவுளை அனுதினமும் பூசித்து வணங்குபவர்கள் வாழ்க்கையில் என்றுவது ஒரு நாள் வெற்றியடைவார்கள் என்றூர். அதைத் தொடர்ந்து முகாம் அதிபர் உரையாற்றுகையில் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர். விஸ்வமடு விவசாயப்படையினரால் விஸ்வமடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் மகேஸ்வர பூசை நடத்தப்பட்டது. இதில் குடியேற்றப் பகுதிமக்கள் கலந்துகொண்டனர்.

காலையில் முகாம் பொறுப்பதிகாரி திரு. நா. விஸ்வநாதன் முகாம் தேசீயக் கொடியை ஏற்றிவைத்தார். விழாமுடிவில் முகாம் உதவி அதிபர் திரு. எஸ். கணேஷ நன்றி தெரிவித்துப் பேசிஞர் திரு. எஸ். கதிரவேல் தலைமையில் நடன, நாடக, கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

# ‘பொறுப்பான பதவிகளுக்கு உடனடி நியமனம் தருக’

## அறிக்கை மூலம் வ. அ. ச. தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், புதன்

‘‘எமது பாடசாலைகளில் பல பொறுப்பு வாய்ந்த பதவிகள் பல காலியாக உள்ளன. இப்பதவிகளைப் பல வருடங்களாக நிரந்தரமற்ற முறையில் பல ஆசிரியர்கள் நிர்வகித்து வருகிருர்கள். இவ்வாறு நிரந்தரமற்ற முறையில் தற்காலிகமாகப் பணி புரிகின்ற முறை ஆசிரிய சேவையிலேயே கூடுதலாகக் காணப்படுகிறது. ஆசிரிய சேவையில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு பெறும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளன: இவ்வாறு வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கிருர்:

ஆசிரியர்களின் நிலைபற்றி வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்த 1960ம் ஆண்டிலிருந்து 1ம், 2ம், 3ந்தர விசேட பதவிகள் வழங்கும் முறை நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. பத்தாண்டு காலமாக வெவ்வேறு பிரிவுகளிலுமுள்ள அதிபர் தலைமையாசிரியர் நியமனங்கள் அதிகம் செய்யாத காரணத்திஞல் பல வெற்றிடங்

(4-ம் பககம் பார்க்க)

## ‘சங்கிலியம்’ வெளிவருகிறது

‘ஈழநாடு’ நடாத்திய காவியப் போட்டியில் முதற் பரிசு பெற்ற காவியம்.

சாகித்தியமண்டலப் பரிசு பெற்ற கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை படைத்த வீர காவியம்.

யாழ்ப்பாண மன்னன் சங்கிலியனின் வரலாற்றைக் கூறும் அரிய இலக்கியப் படைப்பு

சங்கிலியம்

22-4-70ல் நூல் உருவில் ஈழநாடு வெளியீடாக வெளிவருகிறது.

வாங்கத் தவருதீர்கள்.

... நடவடிக்கை எடுப்பார்கள்.

வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தேர்தல்காலத்தில் பொலிஸார் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுபற்றியும் மற்றும் தேர்தல் காலத்தில் பொலிஸார் நடந்துகொள்ளவேண்டிய முறை பற்றியும் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மகாநாட்டில் எடுத்துக்கூறப்படவிருக்கிறது.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் வடமகாணத்தை சேர்ந்த 22 பொலிஸ் நிலைய அதிபர்கள் கலந்துகொள்வார்கள்.

இலங்கையில் கூடிய தொகுதிகளை (13) கொண்ட மாகாணத்தில் பொலிஸ் அதிபராக இருக்கும் திரு. ஆர்: சுந்தரலிங்கம் கீழ்க்காணும் விபரங்களை நேற்று தெரிவித்தார்.

தேர்தல் நடக்கவிருக்கும் 2 மாத கால எல்லைக்குள் என்ன சிறிய சம்பவம் நடந்தாலும் அதுபற்றி கடும்நடவடிக்கை எடுக்கப்படுமென்று பொலிஸ் அதிபர் நேற்று தெரிவித்தார்.

0 நகரத்திலும் கிராமப்புறங்களிலும் உள்ள அரசியல் கட்சி ஆதரவாளர்களாகவுள்ள ‘சண்டியர்களின்’ பெயர்ப்பட்டில் அந்தந்த பொலிஸ் நிலையங்களில் வைத்திருக்கப்படும். அசம்பாவிதசம்பவங்கள் ஏதாவது நடந்தால் இவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் பொலிஸார் இவர்களை கண்காணிப்பர்.

0 தேர்தல் காலங்களில் மதுபானம் அருந்திய நிலையில் பொது இடங்களில் காணப்படுபவர்களும், ஒழுங்கீனமாக நடப்பவர்களும் எவராயிருந்தாலும்சரி பொலிஸாரால் கைதுசெய்யப்படுவார்கள்,

0 பேச்சுரிமை நிலைநாட்டப்படுவதற்காக பொலிஸார் அதிகம் கவனம் செலுத்துவார்கள். தேர்தல் கூட்டங்களில் கேள்வி கேட்பவர்களும், கற்களை வீசி குழப்பம் செய்பவர்களும் குறுக்கீடுசெய்து கூச்சல் போடுகிறவர்களும் மதுபானம் அருந்திய நிலையில் காணப்படுகிறவர்களும் உடனடியாக பொலிஸாரால் கைதுசெய்யப்படுவார்கள்.

0 சந்தைகளிலும், தேனீர் கடைகளிலும் பஸ் நிலையத்திலும், பொது இடங்களிலும் கூட்டமாக நின்று குழப்பம் விளைவிக்க முயற்சிப்பர்கள்மீது பொலிஸார் நடவடிக்கை எடுப்பார்கள்.

0 தேர்தல் கூட்டங்களுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் பொலிசாரிடம் அனுமதிபெறவேண்டும். கூட்டம் நடக்கும் காணிச் சொந்தக்காரரின் கடிதமும் ஒலிபெருக்கிச் சொந்தக்காரரின் கடிதமும் சமர்ப்பிக்கப்படவேண்டும்

0 ஒலிபெருக்கிகளில் கட்சிக்கூட்ட நிகழ்ச்சிமட்டுமே அறிவிக்கப்படவேண்டும்: மற்றைய கட்சியினரைப் பற்றியோ அபேட்சகரைப் பற்றியோ ஒலிபெருக்கிகளில் பேசிஞல், பொலிசார் ஒலிபெருக்கி பாவிப்பதைத் தடைசெய்து நடவடிக்கை எடுப்பார்கள்

## ஜெர்மன் அன்பளிப்பு

கோடடை வியா

மேற்கு ஜெர்மனி இலங்கைக்கு பல வகையானவிளையாடடு உபகரணங்களை அன்பளிப்பு செய்கிறது மேற்குஜெர்மன் தூதர் திரு ஹொக்மன் இந்த விளையாட்டு உபகரணங்களை இனறு கொழும்புத் துறைமுகத்தில் வைத்து தேசியமய அமைச்சிடம் ஒப்படைப்பார்

## 15200000 ருத்தல் தேயிலை ஏற்றுமதி

கோடடை புதன்

கடந்த வருடம் ஒருகோடியே ஐம்பத்திரண்டு லடசம் ருத்தல் தேயிலையை இலங்கை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது.

1968ம் ஆண்டு இலங்கை ஏற்றுமதி செய்ததிலும் பார்க்க இந்த தொகை 58 லடசம் ருத்தல் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்திய இந்த ஏற்றுமதியின் மூலம் இலங்கை 3 கோடியே 73 லடசம் ரூபாயைச் சம்பாதித்துள்ளது மத்திய கிழக்கு நாடுகளே இத்தேயிலையின் பெரும்பகுதியை பெற்றுளளன

ஆட்சி மன்றத்தில்

# சிறுபான்மைத் தமிழருக்கு இடம் அளிக்கவும்’

யாழ்ப்பாணம், வியாழன்

ஐந்து லட்சம் சிறுபான்மைத் தமிழரின் குரல் ஆட்சிமன்றத்தில் ஒலிக்கும் வகையில் சிறுபான்மைத் தமிழ் சமூகத்திலிருந்து பிரதிநிதியொருவரை ஆட்சிமன்றத்திற்கு தெரிவு செய்து ஒடுக்கப்பட்டவர்களின் விமோசனத்திற்கு வழி வகுக்கவேண்டுமென்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைக் கோரும் தீர்மானம் தெல்லிப்பழையில் நடைபெற்ற அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு திரு. எஸ். ஏ கந்தசாமி தலைமை வகித்தார்

சகல பிரிவுகளுடனும், சகல உரிமைகளுடனும் நாட்டில் வாழும் தகுதியுடைய எல்லா மாணவர்களும் இன, மத, ஜாதி பேதமின்றிக் கல்வி பயில வாய்ப்பளிக்கும் பல்கலைக் கழகமொன்று வடமாகாணத்தில் நிறுவப்படவேண்டுமெனப் பிரதமரைக் கோடும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் பேசிய திரு வி. கதிரவேலு குறிப்பிட்டதாவது:

‘‘வடமாகாணத்தில் சகல ஆலயங்களும் ஒடுக்கப்யட்டவர்களுக்குத் திறக்கப்படவேண்டும். ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களுக்குச் சில சலுகைகள் அளித்துப் பல்கலைக்கழகத்தில் பயில உதவவேண்டும். பொது ஸ்தாபனங்களில் சமத்துவம் கோரி நிற்கும் ஒதுக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் கை கொடுத்து உதவவேண்டும். சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து அதனை உடனடியாக அமுல் நடத்தவேண்டும்.’’

திருவாளர்கள் எஸ். அருச்சுனன், என். சின்னத்துரை, ஏ. வடிவேலு உட்படப் பலர் பேசினர்.

...என்பதற்கு இவை சான்று பகருவதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்,

(கு. வி. ம.)

...குரிய தரப்பில் அட்வகேட் எல் டி குருசாமி ஆஜராஞர்.

எதிரிகளின் வழக்கறிஞர் கே வி எஸ் சண்முகநாதன் சாடசியை குறுக்கு விசய மஜாராசா வல்லிபுரம் செல்வரத்தினம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். விசாரணைதொடர்து நடைபெறுகிறது.

# தமிழகத்தில் நேற்று முதல் தமிழிலே அரசாங்க அலுவல்

சென்னை, ஏப்ரல்.1

தமிழ்நாடு அரசாங்க இலாகாக்களில் இன்றுமுதல் தமிழிலேயே அலுவல்கள் நடக்கும். தமிழக அரசு இதற்கான உத்தரவை விதித்துள்ளது.

தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு வி. ஆர். நெடுஞ்செழியன் இந்தத் தகவலை தெரிவித்தார்

ராஜ்யங்களுடனை தொடர்பு, வெளி நாடுகளுடனை தொடர்பு மற்றும் சில விஷயங்களிலும் தமிழில் அலுவல்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இளவரசர் சிகானுக்கு ஆதரவாக

# கம்போடியாவில் மக்கள் ஆர்ப்பாட்டம்

நாம்பன் ஏப்,1

கம்போடிய அதிபர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட இளவரச சிகானுக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாகஆயிரககணககான மககள் கம்போடிய நகர்களில் கிளர்ச்சியும் ஆர்ப்பாட்டமும் செய்துள்ளனர்,

கம்போடியாவுககுள் நுழைந்த வடவியட்னும் துருப்புகள் கம்போடிய நகரங்கள பலவற்றை சின்னுபின்னமாககி விடடதாகவும் நாம்பன் வாஞெலி இன்று அறிவித்தது,

## 80பேர் பலி விமானம்விழுந்து நொறுங்கியது

லண்டன் ஏப்ரல்,1

மொரோககோவிலிருந்து இன்று புறப்படட பிரயாணிகள் விமானம் புறப்படட இடத்திலிருந்து 40 கிலோமீடடர் தொலைவில் விழுந்து நொறுங்கியது, இதில் பிரயாணஞ் செய்த 80பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர், 12 பேர் உயிர் தப்பியதாக அறிவிககப்படுகிறது,

## உல்லாசப் பிரயாணிகள்

### தொகை 100 வீதம் அதிகரிப்பு

கோடடை,புதன்

இலங்கை வரும்உல்லாசப் பிரயாணிகளின் தொகை நூறு சத விகிதமாக அதிகரித்துள்ளதாக அரசு அறிககையொன்று தெரிவிக்கிறது

கடந்த வருடத்திலும் பார்க்க உல்லாசப்பிரயாணிகள் தொகை அதிகரித்துள்ளது, 1966ம் ஆண்டிலும் பார்கக இப்போது 28 சதவிகிதம் உல்லாசப்பிரயாணிகள் தொகை அதிகரிககப்பட்டுள்ளது,

இங்கு வரும் உல்லாசப பிரயாணிகள் மகிழ்ச்சியுடன் நாடகளைப் போககுவதாகவும் தெரிவிககப்படுகிறது’

— —

## மரண அறிவித்தல்

### திருமதி இரத்தினம்

காலஞ்சென்ற வயிரமுத்துவின் அன்பு மனைவியும், பாக்கியம், கண்மணி, இராசம்மா, நடராசா, இராசையா. கெளரி ஆகியோரின் தாயாரும், கணபதிப்பிள்ளை, அன்னப்பிள்ளை, சாவித்திரி, சிவராசா ஆகியோரின் மாமியாரும்; தம்பிராசா, வீரசிங்கம், சிவப்பிரகாசம், கனகலிங்கம், கந்தையா, நல்லையா ஆகியோரின் சகோதரியும் ஆகிய திருமதி இரத்தினம் இன்று சிவபதமடைந்தார்: அன்ஞரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 2-4-70 வியாழகிழக்மை பிற்பகல் 4 மணிக்கு யாழ்-மானிப்பாய் வீதியிலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும். அறிவிப்பவர்: வ: இராசையா (மகன்), 65, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்: 2102

## கொழும்பு மத்திய சந்தை

கோடடை,புதன்

கொழும்பில் புதிய மத்தியசந்தை ஒன்றை அமைப்பதற்காக உளளூராட்சி அமைச்சர் திரு ஆர் பிரேமதாசா கொண்டுவந்த திடடத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் கோட்டை டெனிஸ் கிளப்புக்கு 'பார் கீப்பர்' (Bar-Keeper) ஒருவர் தேவை. சம்பளம் மாதம் ரூ. 125-00. பிணை ரூபா 500-00 செலுத்த வேண்டும். ஆறு மாதங்களின் பின் பதவி நிரந்தரமாக்கப்படும் 21 வயதுக்கு மேற்பட்டவர்கள். 11-4-70க்கு முன் செயலாளர், கோட்டை டெனிஸ் கிளப், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிப்பதுடன் அதே தினத்தில் குறிப்பிட்ட விலாசத்தில் நேமுகப்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்.

2002

மட்டக்களப்பில் வீடு ஒன்றில் தங்கியிருந்து சமைப்பதற்கு நபர் ஒருவர் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு உடன் நேரில் வரவும். C. S. K. மில், யாழ்ப்பாணம்.

1965

தனியார் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியர்கள் உடன் நியமனத்திற்குத் தேவை. அத்துடன் விசேஷ கலைப் பட்டதாரிகளும் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்புர இல: 2001, 'ஈழநாடு', மே/பா யாழ்ப்பாணம்.

2001

### விற்பனைக்கு

மாவிட்டபுரம் வாளித் தொழிற்சாலைக்கு தென்புறமாகவுள்ள 2வது காணி (பிரதான வீதியில்) 4 1/2 பரப்பு விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: ச. சின்னத்துரை, பிரதான வீதி, மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

1963

நவீன ஜெர்மன் எந்திர சாதனங்களால் திறம்படத் தயாரித்த 'ஓட்டக மார்க்' செங்கற்கள் விற்பனைக்குண்டு. நேரில்அல்லது கடித மூலம் தொடர்பு கொள்க.

ஓராண்டு காலம் பாவித்த பெரிய 'ரில்லர்' ஒன்றும் உடனே விற்பனைக்குண்டு. ஐ ஞ செங்கல் ஓட்டுத் தொழிற்சாலை, கண்டாவளை.

1962

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## திருமண அழைப்பு

சுந்தரமூர்த்தி — மகேஸ்வரி

இறைவன் திருவருளால் நிகழும் சௌமிய ஞூ பங்குனி மாதம் 21-ம் திகதி (3-4-70) வெள்ளிக்கிழமை பகல் 12 மணி முதல் 1 மணி 10 நிமிடம் வரையுள்ள சுபவேளையில் மணமகன் சித்தன்கேணி பெற்ருேல் நிலைய உரிமையாளர் திரு. ச. சுந்தரமூர்த்தி அவர்களுக்கும் மணமகள் பண்ணுகம் தெற்கு திருமதி கந்தையா பொன்னம்மாவின் புதல்வி திருநிறைசெல்வி மகேஸ்வரிக்கும் பண்ணுகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி ஆலயத்தில் திருமணம் நடைபெறும். அத்தருணம் திருமண வைபவத்தில் கலந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு மணமக்களின் பெற்ருேரும், சகோதரர்களும் வேண்டுகிருர்கள்.

2003

## 'மேலும் சேருங்கள்'

யாழ்ப்பாணம், புதன் பலை காரியாதிகாரி பிரிபில் தேசிய இளைஞர் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல இளைஞர்களை மென்மேலும் பங்குபற்றி தேசியப் பணியை வளர்த்து நாடு நலம் பெறச்செய்யும்படி காரியாதிகாரி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இளைஞர்களும் ஊதியம் பெறுவதோடு அறவாழ்வும் வாழ இது வழி வகுக்கும் என இளைஞர்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

(கு. வி. ம.)

## இடமாறறத்துக்கு ஆட்சேபம்

பச்சிலைப்பள்ளி, புதன் அம்பன் அரசினர் வைத்தியசாலை மருந்து கலவையாளராகக் கடமைபுரிந்து வரும் திரு. அ. இரத்தின சிங்கம் என்பவரை துணுக்காய் அரசினர் வைத்திய சாலைக்கு இடமாற்றம் செய்திருப்பதை ஆட்சேபித்து இப்பகுதி மக்களும் கிராம முன்னேற்றச்சங்கங்களும் ஒரு மகஜரை சுகாதார அமைச்சருக்கும் மற்றும் சுகாதாரப்பகுதி மேலதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளனர்


ராஜா (யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த

ஹரிச்சந்திரா


அரியாலை ச. ச. நிலையம்

# 51-வது தேசியவிழா விளையாட்டுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா. அரியாலை சனசமூக நிலையத்தின் 51-வது சுதேசிய வருடாந்த விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள் சிலவருமாறு:-

### கிரிக்கெட்

**'யங்லயன்ஸ்' வெற்றி**

யாழ்ப்பாணம் 'யங்லயன்ஸ்' விளையாட்டுக் கழகத்துக்கும், 'கென்னடி' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் யங்லயன்ஸ் இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

**'கிறீன்பீல்ட்' வெற்றி**

யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் 10 அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

**வைமைன்ஸ் வெற்றி**

வைமைன்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வைமைன்ஸ் 22 அதிகப்படியான ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

### உதைபந்தாட்டம்

**அரியாலை வெற்றி**

யாழ்ப்பாணம் அரியாலை விளையாட்டுக்கழகத்துக்கும், "யாழ். வைய்ட்" கழகத்துக்குமிடையில் நடைபெற்ற 7பேர் கொண்ட உதைபந்தாட்டநொக்கவுட் போட்டியில் அரியாலை எதிர்க்கோஷ்டியை 15 கோல்களால் வெற்றிபெற்றது.

**யாழ். கிறீன் வெற்றி**

"யாழ். கிறீன்" கழகத்துக்கும் வளர்மதிவிளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில், "யாழ். கிறீன்" 10 கோல்களால் வெற்றி பெற்றது.

**அரியாலை வெற்றி**

அரியாலை விளையாட்டுக் கோஷ்டிக்கும், யாழ் கிறீன் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், அரியாலைக் கோஷ்டி 6-1 கோல்களால் வெற்றி பெற்றது.

**'நற்குணம்' வெற்றி**

நற்குணம் கோஷடிக்கும், "யாழ் வைய்ட்" கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நற்குணம் கோஷ்டி 4-1 கோல்களால் வெற்றி பெற்றது.

இந்த உதைபந்தாட்ட "நொக்கவுட்" போட்டியின் இறுதியாட்டத்துக்கு அரியாலைக் கோஷ்டியும், நற்குணம் கோஷ்டியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் யாவும் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்றன.

(தே. நி)

கரபந்தாட்டம்

## றெக்ளமேஷன் சாம்பியன்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் 'கிறீன் பீல்ட்' விளையாட்டுக் கழகத்தினர், 'ஈஸ்டர்' ஞாயிறை முன்னிட்டு நடாத்திய கரபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் றெக்கிளமேஷன் சனசமூக நிலையம் சாம்பியனுகத் தெரிவு செய்யப்பட்டது.

றெக்கிளமேஷன்சனசமூக நிலையமும், கிறீன்பீல்ட்கழக சம்சாரிகள் தெரிவுக் கோஷ்டியும் இறுதிப் போட்டியில் மோதிக்கொண்டன. இந்தப்போட்டி 'மின்ஞெளியில்' நடை பெற்றது.

இப்போட்டியின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை றெக்கிளமேஷன் கோஷ்டி மிகவும் வேகமாகவும் சிறப்பாகவும் விளையாடி 3-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது இக்கோஷ்டியின் வீரர்களான, தாசியோஸ், ஜேம்ஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் விளையாட்டும், எதிர்[illegible]

## மாட்டுச் சவாரிப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், புதன் மூளாய் விளையாட்டுக் கழகத்தினரின் ஆதரவில் பொன்னலையில் நடைபெற்ற மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

**ஏ பிரிவு**

பொ. சங்கரப்பிள்ளை, மயிலிட்டி; சி. சோமசுந்தரம், [illegible]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**வியாழன் 2—4—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற் சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 சித்திரம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவு, 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5.00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 மாணவர் மன்றம்.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரையாடல், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, புதன் வதிரி சப்பாத்துக் கூட்டுறவு உற்பத்திச்சங்க வருடாந்தக் கூட்டம் கூட்டுறவுப் பரிசோதகர் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஏ எம் செல்லத்துரை ஆசிரியர், உப தலைவர் திரு எஸ் [illegible]ணபதிப் பிள்ளை, காரியத[illegible]- திரு எஸ் கே இராசேந்திரன், தனதிகாரி- திரு ரீ சுப்பிரமணியம், [illegible]ள ர்கள்- எம் இராசா, ரீ தங்கவேல், என் [illegible]

## ஜே.பி.யாக நியமனம்



புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த திரு. வல்லிபுரம் தம்பாபிள்ளை கடந்த 26-ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றுள்ளார்.

ஏழாலைக் கிராமசபையின் 15-ம் வட்டார உறுப்பினரான இவர் இளவயதிலிருந்தே கிராமத்தின் முன்னேற்றத்தில் அக்கறைகொண்டு உழைத்துவருகிருர். இளைஞரான இவருக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கப்பட்டதைப் பாராட்டுமுகமாக வரவேற்புவிழா நடாத்துவதற்கு ஒழுங்குகள் நடைபெறுகின்றன.

## பேச்சு போட்டியில் முதலிடம்

பருத்தித்துறை, புதன் வடமராட்சித் தமிழாசிரியர் சங்கத்தால் நடாத்தப்படும் பேச்சுப்போட்டியில் கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலய மாணவர் இரு பிரிவுகளிலும் முதலிடங்களையும் கீழ்ப்பிரிவில் முதலிரு இடங்களையும் தட்டிக்கொண்டனர். பேச்சுப் போட்டி முடிவுகள் வருமாறு:

மத்திய பிரிவு ஆண்கள்: செல்வன் தி. நித்தியானந்தன், பெண்கள்: செல்வி பெர். மல்லிகாதேவி, கீழ்ப் பிரிவு ஆண்கள்: செல்வன் க. கலைச்செல்வன், செல்வன் சிவகாந்தன்.

நேற்றுமுன்தினம் வதிரி தெற்குரூமன் கத்தோலிக்க பாடசாலைகளைச் சேர்ந்த மாணவரும் ஆசிரியரும் சமுகமளித்திருந்தனர்.

## கோரிக்கையினுல் பயனில்லையாம்

பச்சிலைப்பள்ளி, புதன் தற்பொழுது யாழ்ப்பா[illegible]

தேசிய அரசாங்கம்

## கிராமங்களுக்கும் மின்சார வசதி அளித்தது

— சி. பி. டி. சில்வா

கண்டி, புதன் முன்னைய அரசாங்கம் நகரப் பகுதிகளுக்கு மின்சார வசதிசெய்து கொடுப்பதிலும் கவனம் செலுத்தியது. ஆனுல் தேசிய அரசாங்கமோ கிராமப் புறங்களுக்கு மின்சாரவசதி செய்து கொடுப்பதில் கூடிய கவனம் செலுத்தியது.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு சி. பி. டி. சில்வா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கிராமப் புறங்களுக்கு மின்வசதியை அதிகரிப்பதனுல் புதியபுதிய கைத் தொழில்களை உருவாக்கலாம் இவ்வாறு புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதனுல் கிராமப் புறங்களில் வேலையில்லாப் பிரச்னை நீங்கிவிடும் ஒரு அரசாங்கத்தை உருவாக்குவதோ அல்லது அதை வீழ்ச்சியடையச் செய்வதோ இரண்டும் பொது மக்கள் கையிலேயே யுள்ளது. அதேவேளையில் நாட்டுக்கு அளப்பரிய சேவையை யாற்றிய ஒரு கட்சியைத் தெரிவு செய்வதும் மக்களது கடமையே யாகும். முன்னைய அரசாங்கத்திலும் பார்க்க தேசிய அரசாங்கம் கிராமங்களுக்கு பெரும் சேவையாற்றியுள்ளது. திரும்பவும் அது பதவிக்கு வந்தால் கிராமங்களது வாழ்வு மேலும் சுபிட்சமுறும்: எனக்கூறினுர்.

திரு. சுனில் எஸ். அபயசுந்தரா பேசுகையில் நாட்டின் அபிவிருத்தி ஆட்சிக்குவரும் அரசாங்கத்திலேயே தங்கியுள்ளது எனக் கூறினுர்.

திரு ஓ எல் எம், பருக், திரு யு எம். பண்டாரா' திரு டி பி ரத்நாயகா உட்படப் பலர் உரையாற்றினர்,

# செய்திச் சுருக்கம்

### இராணிமாளிகை தீப்பற்றியது

நேற்முன்தினம் கொழும்பு கோட்டையில் உள்ள இராணி மாளிகையில் மின்சாரக் கோளாறினுல் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது. இவ்விபத்தில் எவரும் காயமடைவில்லை ஆனுல்மின் சாரக் கருவிகள் பலசேதமடைந்தன'

0 0 0

### 26 லட்சம் கடனுக வழங்கியுள்ளது

கொழும்புதுறைமுக ஆழ்கடல் அபிவிருத்தி வேலைகளுககாக ஆசிய அபிவிருத்தி வங்கி 26 லட்சம் ரூபாவை இலங்கைக்கு கடனுக வழங்கியிருக்கிறது: விருத்தியின் ஒரு பாகமாக 60,000 டன் எண்ணெய்க் கப்பல் நிற்பதற்கான துறைமுகம் அமைக்கப்படும்

0 0 0

### இ போ ச பஸ் களவாடப்பட்டது

அட்டன்டிப்போவிலிருந்த இ போ ச பஸ் ஒன்றுநள்ளிரவில் களவாடப்பட்டு அட்டனிலிருந்து சுமார் ஒன்றரை மைல்களுக்கப்பால் டிக்கோயாவுக்கு அருகே விடப்பட்டிருந்தது. மேற்[illegible]

### பதவி நீக்கம்

மூன்றுக்கு அதிகமான கூட்டங்களுக்கு சமுக அளிக்காததன் காரணமாக கந்தளாய்க் கிராமசபையின் 3ம் வட்டார உறுப்பினரான திரு டி எம் பி டபிள்யு விஜயரத்ன பண்டார என்பவரை திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தவாமதேவன் பதவி நீக்கம் செய்துள்ளார்,

0 0

### பொலிஸ் இன்ஸ்பெக்டர் இளைப்பாறுகிருர்

1968ம் ஆண்டு டிசம்பர் மாதம் உதவி பொலிஸ் இன்ஸ் பெக்டர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்ற திரு. எம். பி. டெடிகம வடபிராந்திய உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமது முப்பத்தொன்பதரை வருட பொலிஸ் சேவையின்பின் நேற்று இளைப்பாறினுர்.

0 0 0

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(யாழ்ப்பாணம்) நம்பியார் - தங்கவேலு
தினசரி 4 காட்சிகள் நடித்த
ஹரிச்சந்திரா

ராணி ஜெய்சங்கர் (3 வேடங்களில்)
(யாழ்ப்பாணம்) விஜயநிர்மலா - பாலையா
தினசரி 3 காட்சிகள் நடித்த
சிரித்த முகம்

வின்ஸர் சிவாஜி—சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) —சௌகார் ஜானகி
தினசரி 4 காட்சிகள் நடித்த
புதிய பறவை

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்,
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானா மோகனாம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ. கருணாநிதி
நடித்த
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்

பாகவும் விளையாடி 3-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது இக்கோஷ்டியின் வீரர்களான, தாசீசியாஸ், ஜேம்ஸ், ரவிச்சந்திரன் ஆகியோரின் விளையாட்டும், எதிர்க் கோஷ்டியில், லீனப்பு. அன்ரனிப்பிள்ளை ஆகியோரினதும் விளையாட்டு சிறப்பாகஇருந்தன.

பல்லாயிரக் கணக்கான ரசிகர்கள் மத்தியில், கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. தோமஸ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

இந்தப் போட்டியின் இறுதியில், வெற்றி பெற்ற றெக்கிளமேஷன் சனசமூக நிலையக் கோஷ்டிக்கு கிறீன்பில்ட் கழகத்தின் தலைவர் திரு. பி. எப். சேவியர் வெற்றிக் கிண்ணத்தை பரிசளித்தார்.

(தே. நி)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சிவாஜி- ஜெயலலிதா
நடித்த
எங்க ஊர் ராஜா

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
எம் ஜி ஆர் -அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

Now showing
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m
Poya & Public holidays
4 Shows
Gig Young, Carol Lynley
in
THE SHUTTERED ROOM
(Color-adults only)
Sleep one night in the house with the shuttered room and you may never want to sleep again.
தாழ்பட்ட அறைக்குள் ஓர்இரவு நடக்கும் திகில் நிறைந்த சம்பவம்.

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Elvis Presley and
Machele Carey
in
LIVE A LITTLE
LOVE A LITTLE

...போட்டியில் பரிசுபெற்றோர் விபரம் வருமாறு:

**ஏ பிரிவு**

பொ. சங்கரப்பிள்ளை, மயிலிட்டி; சி. சோமசுந்தரம், பொன்னாலை; இ. தவராசா, மயிலிட்டி.

**பி பிரிவு**

இ. கந்தசாமி, உரும்பராய்; க. குழந்தை, மட்டுவில்; ந. நடராசா, உரும்பராய் வடக்கு.

**சி பிரிவு**

ஸி. நடராசா, மட்டுவில்; பிரபாகரன், சித்திரமேழி; க. இராசரத்தினம். மூளாய்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழிபுரம் கிராம சபைத்தலைவர் திரு. சு. கந்தசுவாமி ஜே. பி. பரிசில்களை வழங்கினார்.

...எஸ் கே இராசேந்திரன், தனாதிகாரி- திரு ரீ சுப்பிரமணியம்.

திருவாளர்கள்- எம் இராசா, ரீ தங்கவேல், என் திரவியம், பி [illegible]ராசா. பி அண்ணுச்சசாமி ஆகியோரடங்கிய சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

— —

## ஆசிரிய மாணவர் சுற்றுலா

பருத்தித்துறை, புதன்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விஞ்ஞான, கணிதப்பகுதி மாணவர் அகில இலங்கைச் சுற்றுலா ஒன்றை இன்று மேற்கெண்டனர்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 20-ம் திகதி [2-4-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** வேண்டிய அளவிற்கு இன்று வெள்ளிப் பணம் துள்ளும். மாதுரு வழிப்பெருமைக்கு இடமுண்டு, மனம்போல் யாவும் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர்கள் கொண்டாட்டமும் கிடைக்கும்.

**ரிஷிபம்-** அறவழியில் நாட்டம் பிறக்கும், தாராள சிந்தை மேலிடும் குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை தென்படும், எதிர்பார்த்த சுபகாரியமொன்றுக்கு இன்று வழி கோலப்படலாம் மதிப்பு உயரும்.

**மிதுனம்-** கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். எதிரிகள் காத்திருப்பர் ஆயுதபீடைக்கு இடமளிக்கலாம் எதிலும் அவதானம் வேண்டும்.

**கடகம்-** இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், வாக்குவன்மையின் மூலம் பெரிய மனிதர்களின் ஆதரவு கிடைக்கும், சிலர் வாழ்க்கையில் அதிர்ஷ்டலாபங்களுக்கும் இடமுண்டு.

**சிம்மம்-** ஏக்கத்தின் சாயல் தாக்கும். எதிர்பாராத விதமாக சிக்கல்களில் மாட்டிக்கொள்ள நேரிடும், உள்ளக் கிடைக்கைகளை எவரிடமும் சொல்லாதிருக்கவும் நிதானம்வேண்டும்.

**கன்னி-** புண்ணிய விருப்புக்களில் ஆர்வம் பிறக்கும் பெரியோர்களின் உதவிக்கு இடமுண்டு. கொண்ட கொள்கைளில் அதிக உறுதிப்பாடு தென்படும் சிறப்பான தினம்.

**துலாம்-** வாழ்வுப் பாதையில் வளமான திருப்பம் தென்படும், தொழில்துறையில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள் சிலர் வாழ்க்கையில் அரசினர் விருதுக்கும் இடமேற்படும்.

**விருட்சிகம்-** பொருள்வரவு உபசாரம். பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும் செய்தியும் கிடைக்கும்.

**தனுசு-** சிறிய் விடயத்திற்குக்கூட ஆத்திரம் ஏற்படலாம். பல வழிகளிலும் பணம் செலவாகும். நண்பர் ஒருர் உம்மை ஏமாற்றுவதற்கு முனைவர் சிலர் அவப்பெயருக்கும் இலக்காகலாம்.

**மகரம்-** ஆத்திரப் போக்கு அருமையான சந்தர்ப்பத்தை இழப்பதற்கு இடமளிக்கும் வேண்டியவர்களை பகைத்துக்கொள்வீர்கள். மேலதிகாரிகளுட மோதலைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**கும்பம்-** வீட்டில் சுபகருமங்கள் இடம்பெறும். பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், கைத்தொழில் புரிபவர்களுக்கு நல்ல வருவாய் உண்டு.

**மீனம்-** பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள். இதனால் விபரீதங்கள் தோன்றக்கூடும். மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்கவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். முன்னெச்சரிக்கை நன்று.

## கோரிக்கையினால் பயனில்லையாம்

பச்சிலைப்பள்ளி, புதன்

தற்பொழுது யாழ்ப்பாணம்-ஆளியவளை, பருத்தித்துறை-ஆளியவளை, கிளிநொச்சி- ஆளியவளை ஆகிய மூன்று பஸ்சேவைகளும் ஆளியவளையில் கொடுக்கிளாய் சந்தியுடன் முடிவடைகின்றன. வீதி வேலைகள் பூரணமாய் முடிவடைந்துள்ள ஆளியவளை நாலாம் மைல்கள்வரை மேற்படி மூன்று சேவைகளை நீடித்துத் தரும்படி பொதுமக்களும் பிரயாணிகள் சங்கங்களும் இ. போ. ச. மேலதிகாரிகளைப் பல முறை வேண்டியும் பலன் கிடைக்கவில்லையாம். மேற்படி பஸ்சேவைகளை நீடிப்பதன் மூலம் நீண்ட தூரம் கால் நடையாகவரும் சட்டைக்காடு, வெற்றிலைச்கேணி, போக்கறப்பு மக்கள் தங்கள் பிரயாண தூரத்தைக் குறைக்க வழி ஏற்படும்.

——

## சேவைநலம் பாராட்டு விழா

செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் கடந்த மூன்றரை ஆண்டுகளாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலைக்குஇடமாற்றலாகிச் செல்லும் ஆசிரியர் திரு. சூ. அந்தோனிப்பிள்ளையின் சேவையைப் பாராட்டி கடந்த திங்கட்கிழமை மேற்படி பாடசாலையில் திரு. பி. ஸ்ரீபன் வேண்டக்கோன் தலைமையில் ஒருவிழா நடைபெற்றது.

ஆசிரியர் திரு. தொ. செபமாலை, இ. திருச்செல்வம். திருமதி டெய்ஸி எட்மன்ட் செல்வி மேரி மாகிறேற் செல்வன் அ. பிலிப்ரட்ணம் ஆகியோர் மாற்றலாகிச் செல்லும் ஆசிரியரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

— —

## பாஸ்குத் திருநாள்

பச்சிலைப்பள்ளி, புதன்

இப்பகுதியில் இவ்வாண்டு பாஸ்குத் திருநாள் வெற்றிலைக்கேணிஅர்ச் அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. பெரிய வியாழன் பெரிய வெள்ளி, அலேலூயா சனி, உயிர்த்த ஞாயிறு ஆதியாம் நாட்களில் நடைபெற்ற ஆராதனைகளையும் திருச்சடங்குகளையும் தாளையடி கட்டளைக் குரவர் வண. ஏ. லெபோண் அடிகள் நிறைவேற்றி வைத்தார்.

...விரவில் களவாடப்பட்டு அட்டனிலிருந்து சுமார் ஒன்றரை மைல்களுக்கப்பால் டிக்கோயாவுக்கு அருகே விடப்பட்டிருந்தது. மேற்படி டிப்போவில் வேலை செய்து வந்த ஒரு கண்டக்டர் ஒருவரே களவாடிச் சென்றதாகவும் வழியில் பஸ்ஸை பலத்தசேதத்துக்குள்ளாக்கிவிட்டுமறைந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது. இ போ ச பழுது பார்க்கும் பிரிவில் பணிபுரியும் இருவர் கைதுசெய்யப்பட்டு விளக் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

0 0 0

## யுனெஸ்கோ அதிகாரிகள் விஜயம்

'யுனெஸ்கோ நிறுவனத்தைச் சேர்ந்த 3அதிகாரிகள் இலங்கையிலுள்ள தொழிலாளரின் கல்விநிலை பற்றி ஆராய்வதற்காக விரைவில் இலங்கை வரவுள்ளனர். இவர்கள் தோட்டப்பகுதிகளுக்குச் சென்று தொழிலாளர்களின் கல்வி நிலைபற்றி ஆராய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்துள்ளது.

0 0 0

## ஆழ்கடல்துறைக்கு ஆசியவங்கிகடன்

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கும் தேசிய சீனாவுக்கும் 211 லட்சம் டாலர் கடனளிக்கவுள்ளது. இதில் 26 லட்சம் டாலர் இலங்கைக்கு கிடைக்கும். இந்தக் பெரிய எண்ணெய்க் கப்பல்கள் நிற்பதற்கு கொழும்பு புதிய ஆழ்கடல் துறையை ஏற்படுத்த உபயோகிககப்படும் 15ஆண்டுகளில் திருப்பியளிக்கப்பட இருக்கும் இக்கடனுக்கு வருடாந்த வட்டி 6 8/7 சதவீதமாகும் கொழும்புத்துறைமுக அபி...

...பெக்டர் ஜெனரல் தமது முப்பத்தொன்பதரை வருட பொலிஸ் சேவையின்பின் நேற்று இளைப்பாறினார்.

0 0 0

## காடுவளர்க்கத் திட்டம்

திருகோணமலை மாவட்டத்தில் 300 ஏக்கர் நிலத்தில் காடுவளர்க்கும் திட்டம் ஒன்றை அமுல் நடத்த வனஇலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது

— —

## ஒற்றையாட்சி அமைப்பு

### ஆந்திரா நிராகரித்தது

ஹைதரபாத், ஏப். 1.

இந்திய அரசியல் அமைப்பில் மாற்றம் செய்து ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைக் கொண்டு வரவேண்டுமென்று ஆந்திரப் பிரதேச சட்ட மேல்சபையில் கொண்டுவரப்பட்ட தனியார் பிரேரணையொன்று நிகாகரிக்கப்பட்டது.

— —

## இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, புதன்

குஞ்சுக்குளம் கணேசவித்தியாசாலையில் ஆங்கிலஉதவி ஆசிரியராய்க் கடமையாற்றிய திரு. எம். சிவராசா அவர்கள் இம்மாதம் தொடககம் கட்டைக்காடு றோ. க. த. க. பாடசாலைக்கு ஆங்கில உதவி ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பெல்சியம்மார்ச், 31

பெல்சியத்தில் உளவு பார்க்க முயன்றதாக ருஷ்யர் ஒருவர் பெல்சியம் பாதுகாப்புப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார், 36 வயதான இவரை கைது செய்தபோது இவரிடம் சிறிய கைக்கமரு ஒன்றும் ஏராளமான பணமும் காணப்பட்டதாம்,

நிரந்தர சேமிப்புக்கு
வருடம் 9 சதவீத வட்டி
கொடுக்கப்படும்
இச்சேமிப்பை 30 நாள் அறிவித்தலில்
வருடம் 8 சத வீத வட்டியுடன்
எப்பொழுதும் எடுக்கலாம்.
மறுவிபரங்களுக்கு:-
தம்பி அன் கோ
வண்ணார்பண்ணை — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்போடியாமீதுவியட்காங் தாக்குதல்

நாம்பென், ஏப். 1

ஆயிரக்கணக்கான வியட்காங்கியரும் வடவியட்னும் துருப்புகளும் கம்போடியாவுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துவதாக கம்போடிய அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தென்வியட்னும் எல்லையூடாக இவர்கள் நுழைந்து தாக்குதல் நடத்துவதாக அது கூறியது.

கம்போடியாவில் நடந்த புரட்சி அந்த நாட்டின் உள் விவகாரமென்றும் இதில் ஐ. நா. தலையிடக்கூடாதென்றும் அமெரிக்க செனட்டர் மான்ஸ்பீல்ட் கருத்து தெரிவித்திருக்கிறுர்.

ஐ.நா.வில் கம்போடியாவின் புதிய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருப்பவர் ஐ. நா. தலைமைக்காரியதரிசி யுதாண்டைச் சந்தித்து கம்போடியாமீது வியட்காங்கியரும் வடவியட்னுமியரும் நுழைந்துதாக்குதல் நடத்துவதுபற்றியும் அதனுல்எழுந்துள்ள நிலைபற்றியும் எடுத்துக்கூறினுர். ஆனுல் இப் பிரச்னை பற்றி பாதுகாப்புச் சபையைக் கூட்டி விவாதிக்க வேண்டுமென அவர் கேட்கவில்லை.

## ஒரு வருடத்தில் 30 ஆயிரம் டாக்டர்கள்

மாஸ்கோ, மார்ச் 1

சோவியத்தில் இந்த ஆண்டில் 30 ஆயிரம் டாக்டர்கள் உயர் கல்வி நிலையங்களிலிருந்து பட்டம் பெறுவார்கள். 100 நிலையங்களில் வைத்திய நிபுணர்கள் பயிற்றப்படுகிறுர்கள். எல்லா கல்வி நிலையங்களிலும் போலவே இங்கும் கல்வி இலவசமாகும். மாணவர்களுக்கு உபகாரப் பணம் கொடுக்கப்படுகிறது. அத்துடன் இவர்கள் தங்குவதற்கான வசதிகளும் அளிக்கப்படுகிறது. பாடப் புத்தகங்களும் மற்றும் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

ஆசிய, ஆபிரிக்க, தென் ஆபிரிக்க மாணவர்கள் பெருமளவில் சோவியத் வைத்தியக்கல்வி நிலையங்களில் பயிற்சி பெறுகிறுர்கள்.

## புதிய நிர்வாகிகள்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கிளை வியாபாரிமூலை வாலிபமுன்னணிக் கூட்டம் இம்பர்சிட்டி சித்தி விநாயகர் கோவிலடியில் திரு.ந நடராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. ஸ்ரீவேல்நாதன், உபதலைவர்: ம. மாணிக்கவாசகர், செயலாளர்: அ. கெங்காதரன், உபசெயலாளர்: மா. ஆனந்தகிருஷ்ணன், தனுதிகாரி: சி. நித்தியானந்தன். 12 பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# 'இருகைகளை இழந்தாலும் அபிமன்யுபோல் போராடுவேன்'

— கருணுநிதி

கும்பகோணம், ஏப்ரல். 1

''ஒரு மிராசுதார் என்னுடைய ஒருகையை ஒடிக்கப் போவதாகக் சபதம் செய்திருக்கிறுராம்'' மற்றக் கையை முறிக்கப்போவதாகச் சில கம்யூனிஸ்டுகள் முழக்கமிடுகின்றனராம். எப்படி பாரதத்தில் அபிமன்யூ இரண்டு கைகளை இழந்த நிலையிலும் போராடினுனே அப்படியே நானும் இறுதிவரை போராடுவேன். அவன் இறந்தாலும் அவன் சார்ந்திருந்த பாண்டவர்களுக்கு வெற்றி கிடைத்தது போல் நான் இறந்தாலும் நான் சார்ந்திருக்கும் தி. மு.க.வுக்கு நிச்சயம் வெற்றி கிடைத்தே தீரும்''

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திருப்பனந்தாளில் நிறுவப்பட்டிருக்கும்அண்ணு சிலையைத் திறந்துவைத்துப் பேசிய தமிழக முதலமைச்சர் கருணுநிதி மேற்கண்டவாறு முழக்கமிட்டார்.

மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர்மேலும் பேசுகையில் காலையில் தோசைக்கு மாவரைத்த பெண் உடனடியாக அதைச் சுடுவதில்லை. காரணம் அது. கல்லில் ஒட்டிக்கொள்ளும் என்பதுதான். அதுபோலவே ''எங்களிடமும்'' 5 ஸ்டன்டர்டு ஏக்கர் நிலஉச்சவரம்பு சட்டம் என்ற மாவு தயாராகவிருக்கிறது. அது ஏப்ரல் முதல் கிழமைக்குள் சட்டசபையில் தோசையாகவும் வெளிவரவிருக்கிறது. எனவே கம்யூனிஸ்டுகள் அதற்குள் ஓசை எழுப்ப வேண்டாம்' என நகைச்சுவையாகவும் எதிரிகளைச் சாடினுர்.

# "அமெரிக்கா ஆயுதங்கள் தராவிட்டால்வேறிடமுண்டு' பாகிஸ்தான் அதிபர் கூறுகிருர்

ராவல்பிண்டி, ஏப்.1

'பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் அவசியம் தேவையென்டில் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்குப் புதிய அரசியல் அமைப்பை உரு

ஒக்டோபர் 5ந்திகதி பொதுத்தேர்தல்நடைபெறவிருக்கிறது. 113 அங்கத்த

# குவாட்டிமாலாவில் மேற்கு ஜெர்மன் தூதர் கடத்தப்பட்டார்

குவாட்டிமாலா, ஏப். 1

குவாட்டிமாலாவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதர் கடத்தப்பட்டு விட்டார். கொரில்லாக்களே இவரைக் கடத்திச் சென்றிருக்கலாமெனக்கருதப்படுகிறது. சிலவாரங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதர் கடத்திச் செல்லப்பட்டு குவாட்டிமாலா அரசாங்கத்தினுல் காவலில் வைக்கப்பட்டிருந்த கொரிலாக்களில் நால்வர் விடுதலை செய்யப்பட்டதன் மூலம் அமெரிக்கத் தூதர் மீட்கப்பட்டார்.

வெளிநாட்டுத் தூதர்கள் கடத்தப்படுவது சம்பந்தமாக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று குவாட்டிமாலா அதிபர் எச்சரித்திருக்கிறுர்

கடத்தப்பட்ட தூதரை மீட்பதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுமென்று மேற்கு ஜெர்மன் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

# துருக்கியில் மீண்டும் பூகம்பம்; மேலும்பலர் பலி

இஸ்தான்புல், ஏப்ரல். 1

துருக்கியில் சென்றசனிக்கிழமை ஏற்பட்ட பூமியதிர்ச்சியில் மாண்டவர்களின் சடலங்களை மீட்பதிலும் இடிபாடுகளை அகற்றுவதிலும் உயிர் தப்பியவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதிலும் ஈடுபட்டுள்ள தொண்டர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது. பலத்த மழை பெய்வதால் மாண்டவர்களின் சடலங்கள் அழுகி நாற்றமெடுப்பதும் மழையில் மீட்பு வேலைகள் செய்வது கடினமாக இருப்பதுமே இதற்குக் காரணமாகும்.

துருக்கியின் வேறு சில பகுதிகளிலும் பூமியதிர்ச்சியேற்பட்டது. இதில் 135 பேர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது. ஒரு நகரமும் 50 கிராமங்களும் ஒரு சில நிமிஷங்களிலேயே அழிந்துவிட்டன.

பல நாடுகளிலிருந்து உணவு, உடை, மருந்து ஆகியவை துருக்கிக்து வந்து கொண்டிருக்கின்றன.

## சிறுவர் கலைவிழா

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்தில் சிறுவர் கலைவிழாவொன்று கொண்டாடப்படவிருக்கிறது. அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இவ்விழா வடமாகாண ரீதியில் நடைபெறும். இவ்விழாவில்யாழ். மாவட்டத்திலுள்ள பல சிறுவர் பாடசாலைகளும் கலந்து கொள்ளும். இன்று வண்ணை சிவன் கோவில் மேற்கு வீதியிலுள்ள திறந்த வெளியரங்கில் விழா நடைபெறும்.

# பாரதச் செய்திகள்

ஏப்ரல் 1

## பாரதிதாசன் மனைவி பரிசு பெற்றுர்

புதுடில்லியில்நடைபெற்ற சாகித்திய அக்கடமி பரிசளிப்பு விழாவில் காலஞ்சென்ற புரட்சிக் கவிஞர் பாதிதாசன் எழுதிய ''பிசிராந்தையார்'' என்னும் சிறந்த நூலுக்கான பரிசு ரூ. 5000/- ஐயும் அதற்கான செப்புப் பட்டயத்தையும் அவருடைய மனைவி நேரில் வந்துபெற்றுக் கொண்டார். அவருடன் கவிஞரின் மகன் மன்னர் மன்னரும் வந்திருந்தார்.

0 0 0

## அண்ணு பஸ் நிலையம்

## இந்திரா மிரட்டவில்லை

'ஜனுதிபதி தேர்தலில் சஞ்சீவி ரெட்டியை நிறுத்தினுல் பயங்கர விளைவுகள் ஏற்படுமென்று பிரதமர் எங்கும் மிரட்டவில்லையென புதுக்காங்கிரஸ் காரியதரி, புதுடில்லி சுப்ரீம் கோர்ட்டில் நடைபெற்றுவரும் ஜனுதிபதி கிரி தேர்தல் வழக்கில் சாட்சியமளிக்கையில் தெரிவித்திருக்கிறுர்.

0 0

## சிதம்பரத்தில் வைத்தியக் கல்லூரி

சிதம்பரத்தில் புதிதாக ஒரு வைத்தியக் கல்லூரியை

# புட்டோவின் ஊர்வலத்தில் கைகலப்பு; ஒருவர் கொலை

கராச்சி, ஏப். 1

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவரும் பாகிஸ்தானின் முன்னைநாள் வெளிவிவகார அமைச்சருமான ஸில்புகார் அலிபுட்டோ கலந்து கொண்ட ஓர் ஊர்வலத்தில் இருதரப்பினருக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் கொல்லப்பட்டார். பலர் காயமடைந்தனர்.

சங்கர் நகரில் இச்சம்பவம் நடந்தது. ஜனுப் புட்டோ ஊர்வலமாக அழைத்துவரப்பட்ட போது அவருக்கெதிரான ஒரு கோஷ்டியினர் ஊர்வலம் வரக்கூடாதென ஆர்ப்பாட்டம் செய்தனர். ஊர்வலத்தை சிறிது தாமதிக்கும்படி பொலிசார் கேட்டுக் கொண்டு ஆர்ப்பாட்டக் காரரைக் கலைந்து செல்லுமாறு வேண்டுகோள் விடுத்தனர். இதே சமயம் ஊர்வலம் முன்னேக்கிச் செல்ல ஆரம்பித்தது. ஆர்ப்பாட்டக்காரரும் முன்னேக்கி வந்தனர். இருதரப்பினருக்கிடையிலும் கைகலப்பு ஏற்பட்டது. பொலிசார் நிலைமையைச் சமாளிப்பதற்காகக் கண்ணீர்ப்புகைப் புகைப்பிரயோகம் செய்தனர். ஆனுலும் நிலைமை கட்டுக்கடங்கால் போனது. ஊர்வலத்தினரும்ஆர்ப்பாட்டக்காரரும் கற்கள், தடிகள், துப்பாக்கிகள் ஆகியவற்றை உபயோகித்தனர்.

உதவிப் பொலிஸ் சுப்ரின்டென்ட் உட்பட 12 பேர் காயமடைந்தனர். இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கைகலப்பு சம்பந்தமாக 25 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 'பிரச்னைகளை தாங்கும் வல்லமைதரும்'

உடுவில், புதன்

''விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொண்டு ஆர்வம் காட்டி சிறந்த வீரர்களாகத் திகழ்பவர்கள்தான் பிற்கால வாழ்க்கையில் ஏற்படக்கூடிய பல பிரச்னைகளையும் தாங்கக்கூடியவர்களாக இருக்கமுடியும்'- என வடமராட்சி வடக்கு கிழக்குப் பிரிவுக்காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து வடமராட்சி வடக்கு கிழக்கு பிரிவு விளையாட்டுச் சங்க கூட்டத்தில் பேசும்போது கூறினுர்.

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி கந்தோரில் விளையாட்டுப் பகுதி அதிகாரி திரு. எஸ். கதிர்காமத்தம்பியினுல்ஒழுங்குசெய்யப்பட்ட இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப்பேசிய காரியாதிகாரி திரு. எம். தம்பிமுத்து மேலும் பேசுகையில், 'பருத்தித்துறைப் பகுதியில் ஒரு விளையாட்டுத்திடல் இல்லாமல் இருப்பது வருத்தத்துக்குரியதாகும். வசதியான இடத்தைத் தெரிவுசெய்து அறிவித்தால் அதனை நான் அமைத்துக் கொடுப்பேன். என்றுர்.

## இ.போ.ச சாரதிக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

அண்மையில் கொலை செய்யப்பட்ட இ.போ.ச சாரதி ஐயாவின் மரணம் குறித்து யாழ்ப்பாணம் பிரயாணிகள் சங்கம் தனது அனுதாபத்தை ஐயாவின் குடும்பத்தினருக்கு அனுப்பிவைத்துள்ளது.

பஸ்சுக்காகக் காத்து நிறுகும் பிரயாணிகள் எவரையும் பஸ்சில் இடமில்லை என்று கூறி விட்விட்டு செல்லாமல் அனுதாபம் காட்டி அரும்பணி புரிந்த இவரின் சேவையைப் பாரா

## ஆலயத்தில் அடியார் இம்சிக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், புதன்

கோவிலில் வைத்து அடியார் ஒருவர் கோவில் முகாமையாளர்களிலொருவராலேயே இம்சிக்கப்பட்டாராம். இச்சம்பவம் மானிப்பாய்மருதடியிலுள்ள பிரபல ஆலயத்தில் நடைபெற்றதாக அவ்வடியார் தெரிவித்தார்.

பிரஸ்தாப ஆலயத்தின் கொடியேற்றதினத்தன்று குறிப்பிட்ட பெண் அடியார் சுவாமிக்கு தேங்காய் முதலிய அர்ச்சனை சாமான்களை வழங்கியதாகவும், பின்னர் அவ்வடியார் பிரசாதம் கேட்டபோதுகோவில் குருக்களுக்கு உதவியாயிருந்த அவ்வாலய முகாமையாளர்களில் ஒருவர் வெறுமனே தேங்காயுடன் விபூதி முதலியவற்றுக்குப் பதிலாக தட்டத்துடன் பிரசாதம் வழங்கியதாகவும் தட்டம் தம்முடையதல்லவென்பதை உணர்ந்த அடியார் அதனைப்பெறமறுத்து வேறு பிரசாதம் தமக்கு வழங்குமாறு கேட்கவே ஆத்திரமடைந்த அம்முகாமையாளர் தட்டந்துடன் பிரசாதத்தைச் சுழற்றி வீசியதாகவும், இதனுல் மனமுடைந்த அவ்வடியார் கோவில் தரிசனத்திற்கு வந்திருந்த அப்பகுதிப்பெரியார் ஒருவரிடம் முறையிட்டதையடுத்து நிலைமை மோசமடைந்ததாயும் பிரஸ்தாப முகாமையாளருக்கும் அப்பெண் அடியாருக்குமிடையே பலத்த வாக்குவாதம் நடந்ததாயும் அவ்வடியார் கூறினுர்.

## "சங்கீதப் பரீட்சார்த்திகளாக இவர்கள் இருக்கமுடியாது"

யாழ்ப்பாணம், வியா.

சங்கீதப்பரீட்சைச் சபையிலுள்ளவர்கள் சங்கீதப் பரீட்சையில் பரீட்சாதிகாரிகளாக இருக்க முடியாதென்றும், வெளியாரே பரீட்சிக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானம் வட இலங்கைச் சங்கீதசபையின் விசேஷ கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வடபிராந்திய கல்வி அதிபர் திரு சி. தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேறு பல விஷயங்கள் பற்றியும் ஆராயப்பட்டன. (கு. வி. ம.)

## "அறிவு,தேகநலம் பெற

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அதிபர் கூறுகிறார்

ராவல்பிண்டி, ஏப்.1

'பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் அவசியம் தேவையென்பது அமெரிக்காவுக்குத் தெரியும். டாங்கிகள் மற்றும் ஆயுதங்கள் வழங்குவதில் அமெரிக்கா காலதாமதம் செய்தால், வேறுஇடங்களிலிருந்து ஆயுதங்கள்பெற வேண்டிய அவசியம் பாகிஸ்தானுக்கு ஏற்படும்' என்று பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகான் பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்குப் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு ஐந்து அடிப்படை அம்சங்களைத் தாம் தெரிவித்திருப்பதாகவும் யாஹ்யாகான் தெரிவித்தார்.

தேர்தல் முடிந்து 110நாட்களுக்குள் புதிய அரசியல் அமைப்பை தேசிய சட்டசபை உருவாக்கிவிடுமென்பதில் ஐயமில்லையென்றும் யாஹ்யாகான் சொன்னார்.

ஒக்டோபர் 5ந் திகதி பொதுத்தேர்தல்நடைபெறவிருக்கிறது. 113 அங்கத்தவர்கள் கொண்ட தேசிய சட்டசபை புதிய அரசியலமைப்பை உருவாக்கும்.

ஒரு சமஷ்டி யூனியனில் பாகிஸ்தான் பிரதேசங்கள் இணைந்திருக்கும். பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசு என இனி பாகிஸ்தான் அழைக்கப்படுமென்று அதிபர் யாஹ்யாகான் தெரிவித்தார்.

# சூடானில் கிளர்ச்சி நசுக்கப்பட்டது

கார்ட்டும், ஏப்.1

சூடான் அரசுக்கெதிராக கிளர்ச்சிநடத்தி அபாத்தீவைத் தங்கள் வசம் வைத்திருந்த கிளர்ச்சிக்காரர்களை அடக்கி அந்தத்தீவை அரசாங்கத் துருப்புகள் கைப்பற்றிக் கொண்டன.

அபாதீவில் ஆயுதங்கள, டாங்கிகள், விமான எதிர்ப்புப்பீரங்கி ஆகியவைகளை அரசுப்படைகள் கைப்பற்றியிருக்கின்றன. கிளர்ச்சிக்காரர்களுக்குத்தலைமைதாங்கியவர் தப்பிவிட்டார்.

கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய இமாமை கைது செய்து தூக்கிலிடவேண்டுமெனக்கோரி நேற்று கார்ட்டுமில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. நாட்டைசின்னாபின்னமாக்குவதற்கு இமாம் முனைவதாக அவர்கள் கூறினர்.

பத்துமாதங்களுக்கு முன்னர் புரட்சியின் மூலம்ஆட்சிபீடத்திலமர்ந்த மேஜர் ஜெனரல் ஜபார் முகமத் அல் நிமேரியைக் கொலை செய்வதற்கு சென்றவாரம் முயற்சி நடைபெற்றது.

## 7 வயது சிறுமியை 7 தடவை பாம்பு கடித்தது

குருநாகல், புதன்

குருநாகல்பகுதியில் உள்ள மாபகமஎன்னும் இடத்தைச் சேர்ந்த பி. சோமலதா என்னும் 7 வயதுச் சிறுமியை ஏழுதடவை பாம்பொன்று துரத்திக் துரத்திக் கடித்தது. பாம்புக்குப் பயந்து ஓடிய சிறுமி 7-வது தடவையாக அவளைத்துரத்திய பாம்பு கடித்ததும் ஒரு கிணற்றுக்கருகில் விழுந்து மரணமானாள்.

இப்பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். மனனநாயக்கா மரணவிசாரணை நடாத்தினார். மரணவிசாரணையின்போது மேற்படி சிறுமியின் தாய் தனது பிள்ளையைப் பாம்பு துரத்தித் துரத்திக்கடித்ததையும் அவள் வீழ்ந்து மரணமானதையும் தான்கண்டதாகக் கூறினாள்.

## லைசன்ஸ் கிடைக்கும்

உடுப்பிட்டி, புதன்

10 பனைகள் எங்கிருந்தாலும் கருப்பநீர் பெற 'லைசென்ஸ்' இனமாகக் கொடுக்கலாம் என்று அமைச்சர் கடந்த நான்கு ஆண்டுகளாகத் தனது வேண்டுகோளை ஏற்றுத் தொடர்ந்து பிரகடனம் செய்து வருவதாக கலைக்கப்பட்ட ஆட்சிமன்ற உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

முன்னர் வீடு உள்ள ஒரு காணியிலேயே கருப்பநீர் பெறப் பத்துப் பனைகளுக்கு லைசென்ஸ் வழங்கப்படுமெனப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

## தமிழருக்கு விசேஷ சலுகைகள் வழங்குவோம்

குருநாகல், புதன்

ஸ்ரீ லங்கா சுதந்திக்கட்சியின் மகாநாடு ஒன்று இம் மாதம் 30-ம் திகதி குருநாகல் வாடிவீட்டுத் திடலில் நடைபெறவிருக்கிறது.

இம்மகாநாட்டில் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 12 அபேட்சகர்களும் தாம் போட்டியிடும் தொகுதிகளிலிருந்து 5000 இளைஞர்களை திரட்டி வாலிப முன்னணி அமைக்க வேண்டும் என இவர்கள் கோரப்படவிருக்கின்றனர்.

மேலும் இக்கூட்டத்தில் கொழும்பு பல்கலைக்கழக மாணவர்களும் பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகுறது.

மாவத்தகம பகுதியில் போட்டியிடும் அபேட்சகரான திரு. ரி. பி. விக்கிரமசிங்கா பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியில் இம்முறை நாங்கள் ஆட்சியைக் கைப்பற்றுவது திண்ணம், நாங்கள் எங்கள் ஆட்சிக்காலத்தில் எல்லா பட்டதாரிகளுக்கும் கட்டாயம் வேலைவாய்ப்பளிப்போம். நாங்கள் இம்முறை ஆட்சியைக் கைப்பற்றி தமிழருக்கு விசேஷ சலுகைகள் வழங்க எண்ணி பல திட்டங்கள் தீட்ட எண்ணியுள்ளோம். அத்திட்டங்கள் தமிழருக்கு மறுமலர்ச்சியை உண்டாக்கும் என்பது எங்கள் நம்பிக்கை என்று கூறினார்.

...அ[illegible]டன் கவிஞரின் மகன் மன்னர் மன்னரும் வந்திருந்தார்.

0 0 0

## அண்ணா பஸ் நிலையம்

[illegible]ங்கல்பட்டையடுத்த மதுராந்தகத்தில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் 'அண்ணா பஸ் நிலையம் அமைக்கப்பட்டுவருகிறது. இதற்கு முன்னால் ரூ. 35000 செலவில் 'அண்ணா வளைவு' அமைப்பதற்கும் ஒழுங்கு செயயப்படுகிறது.

0 0

## சிதம்பரத்தில் வைத்தியக் கல்லூரி

சிதம்பரத்தில் புதிதாக ஒரு வைத்தியக் கல்லூ[illegible]யை நிறுவவேண்டுமெனசெ[illegible]னை சட்டசபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது. சுகாதார இலாகா மானியக்கோரிக்கை மீது நடைபெற்ற விவாதத்தில் புதுக்காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரே இக்கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

## "ஒற்றுமையாகச் செயற்பட்டாலே உரிமைகளைப் பெறலாம்"

— எம். சிவசிதம்பரம்

உடுப்பிட்டி, புதன்

"எமது இனத்தின்உரிமைகளைப் பாதுகாப்பதில் நாங்கள் எவருக்கும் சளைத்துவர்கள் அல்ல அரசாங்கத்தில் நாம் அங்கம் வகித்தாலும் தமிழருக்கு எதிராக ஏதும் செய்தால் நாம் வெளிப்படையாக எதிர்ப்போம்."

மேற்கண்டவாறு முன்னாள் உபசபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் வதிரி எல்லியனெல்லை அம்மன் கோவிலடியில் கிராமநல சேவாசங்கத்தை அங்குராப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. கந்தவனம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது.

இலங்கைத் தமிழர் சரித்திரத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம், 1947-ல் ஆண்டு தொடக்கம் 1956-ம்ஆண்டு வரை தமிழ்க்காங்கிரஸ் கட்சி தமிழினத் துக்குத் தலைமைதாங்கியது. 1956-ம் ஆண்டுதொடக்கம் இன்று வரை தமிழசுக்கட்சி தமிழினத்துக்குத் தலைமை தாங்கும் காலம்.

இவ்விருகாலங்களையும் நன்கு ஆராய்ந்துபார்த்தால் எந்தக்காலத்தில் நாங்கள் சிறப்பாக வாழ்ந்தோம் என்பதைச் சுலபமாக உணரலாம்.

சாதி, இன, மத, மொழி போதமின்றி நாம் ஒற்றுமையாகச் செயல்பட்டாலே தாய் மொழியில் கல்விகற்பது போன்ற அடிப்படை உரிமைகளைநாம் பெற முடியும். எமது உரிமைசாசனத்தை அமைப்பதில் எதிர்க்கட்சியினரும் ஒத்துழைப்பதாக வாக்குறுதிதந்துள்ளனர்.

திரு. கந்தையா மகஜர் ஒன்றை திரு. சிவசிதம்பரத்திடம் சமர்ப்பித்தார். திருவாளர்கள் அருணகிரி இராசையா, செ. ஏரம்புசர்மா ஆகியோரும் பேசினர்.

## புதிய சங்கம் உதயம்

சுழிபுரம், புதன்

வடபகுதியில் கிராம சபை பட்டின சபை முதலிய உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் ஒன்றுசேர்ந்து தமக்கென ஒரு புதிய சங்கத்தை உருவாக்கிக்கொண்டனர். தொழில் சங்க ரீதியாக தமது கோரிக்கைகளை பெறுவதே சங்கத்தின் நோக்காகும்.

புதிய நிர்வாகிகளாக தலைவர்: க. சிவசுப்பிரமணியம் (கொக்குவில் கிராம சபை). காரியதரிசி: செ. பரமராசா (வட்டுக்கோட்டை கிராம சபை), தனாதிகாரி: மா. துரைசிங்கம் (சுழிபுரம் கிராம சபை) எட்டுப் பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## ஏற்றுமதியில் வீழ்ச்சி

கோட்டை, புதன்

1968-ம் ஆண்டிலும் பார்க்க சென்ற ஆண்டில் நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருட்களான தெங்குப் பொருட்கள், தேயிலை ஆகியவற்றின் வர்த்தகத்தில் வீழ்ச்சியேற்பட்டுள்ளது என தாழ்ந்த பிரதேச உற்பத்தியாளர் சங்கம் தனது 1969-ம் ஆண்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

...கும் பிரயாணிகள் எவரையும் பஸ்சில் இடமில்லை என்று கூறி விட்விட்டு செல்லாமல் அனுதாபம் காட்டி அரும்பணி புரிந்த இவரின் சேவையைப் பாராட்டி தங்கப்பதக்கம் கொடுத்து கௌரவிக்க இருந்தோம். காத்திராப் பிரகாரமாக இப்படி நடந்து விட்டது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம் என்று பிரயாணிகள் சங்கம் தனது அனுதாபக் கடிதத்தில் தெரிவித்துள்ளது.

## மாலைகளைஏற்க மாட்டார்

மட்டுவில், புதன்

ஒருவருட காலத்திற்கு, எக்காரணத்தைக் கொண்டும், சாவகச்சேரி முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம், மலர் மாலைகளை ஏற்றுக் கொள்ளமாட்டார். எனவே தனக்கு எந்தவைபவத்திலும் மலர்மாலை அணிவிக்கவேண்டாம் என்று தன் ஆதரவாளர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான கொடிகாமம் 'ஐயா' என்றழைக்கப்படும், சி. வேலு என்ற இ. போ. ச. பஸ் சாரதி அகாலமரணமடைந்ததையிட்டு திரு. நவரத்தினம், தொடர்ந்து ஒரு வருடத்திற்கு துக்கம் அனுஷ்டிக்கிறார். துக்கம் அனுஷ்டிக்கும் அவர் மாலைகளை ஏற்கவும் மறுத்துள்ளார்.

## பாலுணவு மறுக்கப்படுகிறதாம்

யாழ்ப்பாணம், வியா

குருநகரில் அரசாங்கத்தால் நடாத்தப்பட்டுவந்த மருத்துவமனை கடந்த ஆறு மாத காலமாக வேறிடத்தில் நடைபெற்று வந்ததினால் கர்ப்பிணிகள் சிகிச்சை பெறுவதில் பெருத்த கஷ்டத்துக்குள்ளாக வேண்டிய நிலையேற்பட்டது. இதனால் அதிருப்தியடைந்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினால் மேற்படி மருத்துவமனையில் போயாவுக்குப்பின் இரண்டாம் நாள் சிகிச்சை வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரஇலாகாவினால் நடாத்தப்படும் மேற்படி மருத்துவமனையில் மாநகரசபையினரால் வழங்கப்படும் பாலுணவு குழந்தைப்பிள்ளைகளுக்கு வழங்குவது மறுக்கப்பட்டது குறித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

...சிக்கவேண்டுமென்றும் கோரும் தீர்மானம் வட இலங்கைச் சங்கீதசபையின்...

...இக்கூட்டத்தில் வேறு பல விஷயங்கள் பற்றியும் ஆராயப்பட்டன. (கு. வி. ம.)

## "அறிவு, தேகநலம் பெற விளையாட்டு அவசியம்"

— பிரதமர் டட்லி

கோட்டை, புதன்

'இளைஞர்களுடை ஆறிவும் தேகநலமும் விருத்தியடைவதற்கு விளையாட்டுகள் உறுதுணையாகின்றன. விளையாட்டுகளை நல்லமுறையில் இளைஞர்கள் பயில்வதன் மூலம் சிறந்தவர்களாக உருவாக முடியும்'

இவ்வாறு இலங்கைப் பிரமர் திரு டட்லி சேனநாயக்கா நேற்று முன்தினம் கொழும்பு சுகததாசா விளையாட்டரங்கில் 1வது தேசிய விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது தெரிவித்தார்.

விளையாட்டு விழாவின் ஆரம்பத்தில் பிரதமர் சமாதானப்புறுவைப் பறக்க விட்டார்.

அஞ்சல் ஓட்ட வீரர்கள் மும்மொழிகளிலும் ஆசிச் செய்திகள் கொடுத்தனர்.

தேசிய விளையாட்டமைச்சர் சுகததாசா பேசுகையில் தேசிய விளையாட்டுவீரர்களுக்கு நன்றிதெரிவித்ததுடன் வெளிநாட்டு அரசுகள் விளையாட்டு துறைக்கான உபகரணங்கள் தந்துதவியமையையும் பாராட்டினார்.

## பத்மினி இம்மாதம் வருகிறார்

கோட்டை, புதன்

"இலங்கை கலாசார அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் வெள்ளவத்தை இராமக்கிருஷ்ணமிஷன் மண்டபத்திலும் சுகததாசா ஸ்ரேடியத்திலும் இம் மாதம் 19, 20, 21,ம் திகதிகளில் நடாத்தப்படவிருக்கும் 'கலைவிழா'வுக்கு நாட்டியப் பேரொளி பத்மினி தலைமை தாங்குவார்.

இவ்விழாக்களில் திரைப்பட ஒப்பனைக் கலைஞர் நாஞ்சில் சிவராமும் நேரில் சமூகம் கொடுப்பார்.

ஒப்பனைசெய்வதைப்பற்றி நாஞ்சில் சிவராம் பயிற்சி அளிக்க விருப்பதால் இதில் பங்கு பற்ற விரும்புபவர்கள் கொழும்பு செட்டியார் தெரு 271ம் இலக்கத்திலுள்ள இலங்கை கலாசார அபிவிருத்திக் கழகத்துக்கு உடன் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டமான் எச்சரிக்கை

கோட்டை, செவ்வாய்

"வேலை நாட்குறைப்பு, கொந்தரப்பு ரேட்குறைப்பு, முன்னறிவித்தல் இன்றித் தோட்டவிற்பனை, சுகாதார மற்ற வீட்டுவசதிகள் ஆகியவற்றால் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரநிலை மோசமடைந்துள்ளது. காங்கிரஸ் பெற்றுக்கொடுத்த 40 சத சம்பளஉயர்வையும் முறியடிக்கும் வகையில் இச்செயல்கள் அமைந்துள்ளன. இந்தநிலையில் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த தோட்டத் துரைமார் சம்மேளனம் முன்வரவேண்டும். இல்லையேல் அகில இலங்கையிலும் பொது வேலைநிறுத்தம் ஒன்று நடைபெறுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்" இவ்வாறு இ. தொ. காங்கிரஸ் தலைவரான திரு. எஸ். தொண்டமான் தோட்டத்துரைமார் சம்மேளனத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் எச்சரிக்கைவிடுத்துளளார்.

பாடசாலை

## தரம் உயர்த்தப் படவில்லையாம்

வேலணை, செவ்வாய்

வேலணை அம்பிகை மகளிர் வித்தியகலயம் தரம் உயர்த்தப்படவில்லையென இப்பகுதிமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். வேலணைப் பகுதியில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறு வேறுகத் தனித்தனி உயர்தரப் பாடசாலைகள் வேண்டுமென இப்பகுதிப் பொது மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தை ஆண்களுக்கும் அம்பிகை வித்தியாலயத்தைப் பெண்களுக்குமாகக் கல்விப்பகுதி ஒதுக்கியிருந்தது. இருபாடசாலைகளும் பஸ்போக்குவரத்து வசதியுடைய கேந்திரஸ்தானங்களில் அமைந்துள்ளபோதிலும் அம்பிகை மகளிர் வித்தியாலயம் தரமுயர்த்தப்படவில்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

வீடு திருந்தினல் வீதி திருந்தும்- வீதி திருந்தினல் நகரம் திருந்தும்- நகரம் திருந்தினல் நாடு திருந்தும். —குன்றக்குடி அடிகள்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 20-ந் திகதி (2-4-70)

## செனட் சபையில் ஓர் இடம்

அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்காக இப்பொழுது செனட் சபையில் அங்கம் வகிக்கும் இருவர் தங்கள் பதவிகளை ராஜினுமாச் செய்யவிருக்கிறுர்களென்று ஒரு செய்தி கூறுகிறது பொதுத்தேர்தலில் போட்டியிடும் பொருட்டு செனட்சபை அங்கத்தவர்கள் ராஜினுமாச் செய்வதும், பொதுத்தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவர்கள் செனட்சபைக்குத்தெரிவு செய்யப்படுவதும் இங்கு மட்டுமல்ல இதர சில ஜனநாயக நாடுகளிலும் பழக்கத்தில் உள்ளதுதான்.

ஆனுலும் தேர்தலில் தோற்றவர்களைத்தான் செனட் சபைக்குத் தெரிவு செய்வதென்பதும் அவர்களையே மீண்டும் தேர்தலில் சந்தர்ப்பம் வரும்பொழுது நிறுத்துவதென்பதும் செனட்சபையையே கேலிக்கூத்தாக்குவதாகவே இருக்கும் மக்களுக்கும் நாட்டுக்கும் சேவைசெய்யக் கூடியவர்களை, அவர்களின் ஆற்றலையும் அனுபவத்தையும் எப்படியாவது பயன்படுத்தவேண்டுமென்பது தான் இதன் நோக்கம் என்று கூறலாம். மக்களுக்கும் நாட்டுக்கும் சேவைசெய்வதென்றுல் ஆட்சிமன்ற அங்கத்தவராகத்தான் வரவேண்டுமா? பொதுத்தேர்தலில் போட்டியிட்டு மக்களால் நிராகரிக்கப்பட்டுவிட்டால்(அதற்கு என்னதான் காரணம் கூறப்பட்டாலும்) அவர்களுக்கு செனட்டர் பதவியும் வெளிநாட்டில் தூதுவர் பதவியும் அளிப்பது முறைதானு? ஒரு தொகுதியின் மக்கள் நிராகரித்துவிட்டார்கள் என்பதற்காக அவர்களின் அனுபவத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தக் கூடாதென்று கூறுவது சரியல்ல என்று கூறலாம். ஆனுல் அவர்களை வேறு வழிகளில் பயன்படுத்தலாம்.

காலியாகும் இரு செனட் பதவிகளுக்கும் பொதுத்தேர்தலில் போட்டியிட முன்வந்து ஏதோ காரணங்களுக்காக கட்சி 'டிக்கட்' கிடைக்காதவர்களை நியமிப்பதில் அர்த்தமில்லை.

காலியாகும் என எதிர்பார்க்கப்படும் இரு செனட் பதவிகளில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்தது, மற்றது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சார்ந்தது. இந்த இரு கட்சிகளும் சிறுபான்மைத் தமிழர் விஷயத்தில் ஆர்வமும் அக்கறையுமுள்ளவை.

முன்னர்தான் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டாலும் இப்பொழுதாவது, தேர்தலுக்காகக் காலியாகும் இரண்டு இடங்களில் ஒன்றுக்காவது சிறுபான்மைத் தமிழர் ஒருவரைத் தெரிவுசெய்யலாம். இது தேர்தல்தந்திரம் என்று யாரும் சொல்லவும் மாட்டார்கள். செய்வார்களா?

## திருக்கணித பஞ்சாங்கம்

### (சாதாரண வருடம்)

யாழ்ப்பாணம் மட்டுவில் பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயரால் கணிக்கப்பெற்று வெளியிடப்பட்ட சாதாரண வருஷ திருக்கணித பஞ்சாங்கம் கிடைக்கப் பெற்றேம்:

அச்சுப்பதிவு: ஜோதிஷ ரத்னகரநிலையம், மட்டுவில்,

விலை: ரூபா 2-00.

சாங்கம் இவ்வருடம் 83-ம் வருடப் பிரசுரமாக யாழ்ப்பாணம் மட்டுவில் சி. சுப்பிரமணியஐயரால் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

பஞ்சாங்கத்துக்குரிய அம்சங்கள் யாவும் ஒருங்கேயமைத்து காணப்படும் இத்திருக்கணித பஞ்சாங்கம் சோதிடர் உதவியின்றி எதிர்வரும்நமது புதுவருடப்

# மீட்றிக் முறையை நாம்பின்பற்ற வேண்டுமா?

## அளவை முறைகளில் குளறுபடிகள்

திருச்சி வானெலியில் கமக்காரர்களுக்கு மிகவும் உபயோகமான பல அரிய விஷயங்களை தினந்தோறும் கிராம நிகழ்ச்சியில் கேட்கிறேம். ஆனுல் இலங்கையில் உள்ளவர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு சிறிய சங்கடம் ஏற்பட்டு விடுகிறது. ஒரு ஹெக்டாரில் ஐநூறு கிலோ நெல் விளைகிறது. ஒன்றரை கிலோமீட்டர் தூரத்தில் அணைக்கட்டு அமைக்கப்பட்டது. இப்படி ஏதேதோ சொல்லுகிறுர்களே! இதென்ன இந்தஹெக்டாரும் கிலோவும் மீட்டரும் என்று நாங்கள் மயங்கிப் போகிறேம். எங்களுக்கு தெரிந்தது பரப்பும், ரூத்தலும், மைலும் அவர்கள் வேறேதோ அளவை சொல்லுகிறுர்கள்.

ஆமாம், சமீபகாலமாக இந்தியாவில் நாணய அளவை, நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை எல்லாம் மாறியிருக்கின்றன. முன்பெல்லாம் அங்கே அணவையும் பைசாவையும் தம்படியையும் வைத்துக்கொண்டு மாரடித்தார்கள். பன்னிரண்டு தம்படி ஓரணு, நாலணு கால்ரூபாய், எட்டணு அரை ரூபாய், பதினறு அணு ஒருரூபாய் என்று ஒரு சிக்கலான கணக்கு இருந்தது. இலங்கையிலிருந்து முதன் முதலாக இந்தியா போகிறவர்களுக்கு இது பெரிய தலையிடி. இப்பொழுது அந்த நாணய அளவை மாற்றி இலங்கையைப் போல தசாம்ச வழிக்கு இந்தியாவும் வந்துவிட்டது. நூறு காசு அல்லது நையா பைசா (சதம்) ஒரு ரூபாய் என்ற சுலபமான கணக்கு முறையை இப்பொழுதுபின்பற்றுகிறுர்கள்.

ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் என்ற அடிப்படையில் கணக்கிடும் தசாம்ச முறை இப்பொழுது நாணய அளவை, நீட்டல் அளவை, நிறுத்தல் அளவை, முகத்தலளவை ஆகியவற்றிற்கு பல நாடுகளில் பின்பற்றப் படுகிறது. இதைபொதுவாக மீட்றிக்முறை என்று அழைக்கிறுர்கள். இது முதன் முதலில் பிரான்ஸ் தேசத்தில் 1795-ம் ஆண்டு வழக்கத்தில் வந்து இப்பொழுது பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் உலகத்தின்பிற நாடுகள் பலவற்றிலும் பின்பற்றப்படுகிறது. விஞ்ஞான உலகத்தில் இந்த முறையே முழுக்க முழுக்க பின்பற்றப்

கும் வங்கிகளுக்கும் மிகச் சுலபமான மீட்றிக முறை வந்தபின்பு இந்தக் குழப்பங்கள் மறைந்து விட்டன. மில்லி, சதம, தசம, தச, சத, கிலோ என்ற பகுதிகளை வைத்துக்கொண்டு எதை வேண்டுமானுலும் அளந்து விடலாம்.

ஒரு சின்ன உதாரணம் இதை விளக்கும். 123,456,789 கன அங்குல தண்ணீரில் எத்தனை கலன் இருக்கிறது. அதன் நிறையென்ன என்று கேட்டால் இப்பொழுது உள்ள கண

— சுப்புடு —

க்கு முறைப்படி இன்று முழுவதும் பேப்பர் பென்கிலோடு தலையடிக்க வேண்டும். கன அங்குலத்தை கன தசம (சென்டி) மீட்டராக்கி விட்டால் விஷயம் ஒரு விநாடியில் முடிந்துவிடும். தசம புள்ளியை மூன்று இடம் இடது பக்கம் அரக்கி விட்டால் மறுமொழிகிடைத்து விடுகிறது:-

123, 456·789 லீட்டர்,
123, 456.789கிலோகிராம்!

திடீரென்று மீட்றிக்முறைக்கு மாறுவது சுலபமான காரியமன்று. பள்ளிக்கூடப் பாடப்புத்தகங்கள் மாற்றப்படவேண்டும், யார்த்தடிகளும் தராசுப் படிகளும் மாறவேண்டும் காணி உறுதிகள் திருத்தி எழுதப்படவேண்டும் இப்படி இன்னும் எண்ணற்ற பிரச்னைகள இருக்கின்றன.

கட்டட நிர்மான வேலை செய்யும் என்ஜினியர்கள் நிலஅளவை செய்யும் உலாந்தார்க்கள், தொழில்நுட்ப வேலைசெய்யும் நிபுணர்கள், உறுதி எழுதும் நொத்தாரிஸ்மார் ஆகியோர் முதற்கொண்டு மேசன்மார், மேஸ்திரிகள், தச்சர், பொற்கொல்லர் எல்லோருக்குமே இந்த மாறுதல் முதலில் சிறிது சங்கடத்தை கொடுக்கும். ஆனுல் ஒரு தரம் பழக்கத்தில் வந்துவிட்டால் மிகவும் எளிதாகப் போய் விடும்.

பூமியின் சுற்றளவில் கால்வாசியை ஒரு கோடியால் பிரித்த ஓர் அளவுதான் ஒரு மீட்டர் ஒருலீட்டர் தண்ணீரின் நிறையில் ஆயிரத்தில் ஒரு பகுதியே ஒரு கிராம். மீட்றிக் முறைவந்து விட்டால் யார், அடி, அங்குலம், சங்கிலி என்பனவும் அவுண்ஸ், ரூத்தல், அந்தர் என்பனவும் பைந்து போத்தல், கலன் என்பனவும் போய் எல்லாம் மீட்டர், கிராம், லீட்டர் என்ற பெயர்த் தொகுதிக்குள் அடங்கி விடும்.

இலங்கையில்இப்பொழுது நாணய அளவை ஒன்றுதான் மீற்றிக் முறையில் இருக்கிறது. இந்தியாவிலும் இதே அளவு முறை வந்து விட்டபடியால் இரு நாட்டவருக்கும் இது சுலபமாய் போய்விட்டது. விரைவில் நீட்டல் அளவையையும் நிறுத்தல் அளவையையும் இந்தியாவைப்போல மீட்றிக் முறைக்கு கொண்டு வந்து விட்டால் பலருக்கும் சௌகரியமாயிருக்கும்.

அணுசக்தி விஞ்ஞானிகள் சிலர் சமீபத்தில் கூடிய போது கிலோகிராம்களை ரூத்தலாக மாற்றுவதில் ஏற்பட்ட ஒரு சிறிய தவறு ஈற்றில் பிரமாண்டமான பிழையாகப் போய்விட்டது. இதைப்பார்த்த ஒருநிபுணர் 'மீட்றிக் முறைதான் ரஷ்யாவின் இரகசிய ஆயுதம்' என்றுர்.

—

## "வாத்தியார், வாத்தியார் என்றுகூளறியபடிஓடினேன்'

### பெண்கடத்து வழக்கில் சாட்சியம்

மட்டுவில், புதன்

சின்னத்தம்பி வாத்தியார் ஒழுங்கைக்குள் வாத்தியார், வாத்தியார் என்று கத்தியபடி ஓடினேன் எதிரிகள் பின் சீட்டிலிருந்து இறங்கிஓடி வந்து, என்னைக்கட்டிப்பிடித்துத்தூக்கிகாரில் ஏற்றமுனைந்தார்கள் ஆனுல் என் ஒரு கால் கதவிற்கு உள்ளேயும், மறுகால் வெளியேயும் இருந்தது, மூன்றும் எதிரி என் கையை உள்ளே இருந்து கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

இவ்வாறு சாவகச்சேரி மாஜிஸ்திரேட்திரு.கே.விக்னராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பெண் கடத்து வழக்கொன்றில் சாட்சியமளித்த 16 வயது பள்ளி மாணவி பரமேஸ்வரி கூறினர்.

இந்த வழக்கில் [...] வடக்கைச் சேர்ந்த செல்வி பரமேஸ்வரி சின்னத்தம்பி

சுமார் 100 யார் தூரம் சென்றுவிட்டுதிரும்பஎம்மை நோக்கி அந்தக்கார் வந்தது. அப்பொழுது அதனுள் எதிரிகள் இருப்பதைக் கண்டதும் நான் பயந்து சின்னத்தம்பி வாத்தியார் வீட்டு ஒழுங்கைக்குள் 'வாத்தியார், வாத்தியார்' என்று கத்தியபடி ஓடினேன்.

1-ம், 2-ம் எதிரிகள் பின் சீட்டிலிருந்து இறங்கிவந்து, என்கையைப்பிடித்து, இழுத்து கட்டிப்பிடித்து தூக்கிச் சென்று, இடதுபக்க கதவுக்குள்ளால் உள்ளேபோட முனைந்தனர். நான் திமிறினேன். ஒரு மாதிரி என்னைக் காரில் ஏற்றியதும் கார் புறப்பட்டபோது கதவு திறபட்டது. நான் பொ[...]தென்று நிலத்தில் விழுந்தேன்.

[...]கள் ஓடிவிட்[...] எனக்கு முழங்காலில் பெரிய இரத்தக் காயம்

## பொலிஸ் பிரிவு

கோட்டை, புதன்

தேர்தலுக்கான வேலைகளைக்கவனிப்பதற்கு திரு. ஜாக் வான்சன்டீன் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு உதவியாளராக பொலிஸ் சுப்ரின்டன்ட் திரு. எஸ். ரி. துரைரத்தினம் கடமைபுரிவார்

தேர்தலுக்காக ஆரம்பிக்கப்பட்ட பொலிஸ் பிரிவு நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. வடபிராந்திய உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாகக் கடமைபுரிந்த திரு. டெடிகம ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து திரு. ரி பி வீரபிட்டிய அவரது இடத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்

பொதுத்தேர்தலை முன்னிட்டுஆரம்பிக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவு தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

## உதவி ஆசிரியர் சங்கம்

ஆசிரியருக்குக்கடிதங்கள்

# படகு சேவைகளை சீர்திருத்துக

**பூநகரி**

யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள பூநகரி-கேரதீவு படகுச் சேவை காலை 5-45 மணியிலிருந்து மாலை 8-45 மணி மட்டும் தினமும் நடத்தப்படுகின்றது. இதற்காக இரு மீன்பிடி வள்ளங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வள்ளங்களில் பிரயாணம் செய்ய வேண்டியவர்கள் எத்தனை பேர்கள் என்று எவராலும் கட்டாயப்படுத்தப்படவில்லை. இவ்வள்ளங்கள் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு உகந்ததாவென அரசாங்கத்தால் சிபார்சு பண்ணப்பட்டதாகவும் தெரியவில்லை. தினமும் பதினைந்து முதல் இருபது தடவை சேவை நடத்தும் இவ்வள்ளங்களில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் வள்ளங்கள் புறப்படும் போதும் சேவை முடியும் போதும் ஆறுதலாகவோ அல்லது அமைதியாகவோ பிரயாணம் செய்வதில்லை காரணம் பஸ்ஸில் உடனடியாக் ஆசனங்களைப் பிடிப்பதற்காக இவ்வாறு செய்கிறுர்கள். இதையிட்டு வரும் விபத்துக்களை பிரயாணிகளோ அல்லது இவ்வாயச் சேவையை நடத்தும் அதிகாரிகளோ கட்டுப்படுத்துவதில்லை. வருடா வருடம் இவ்வாயச் சேவை ஒப்பந்த மூலம் கொடுக்கப்படுகின்றது ஆனுல் இச்சேவை பற்றி எந்த அதிகாரிகளும் கவனிப்பதில்லை இங்குள்ள பிரயாணிகளுட் சிலர் இது சிறுகடல்தானே. ஏதும்நடந்தால் தப்பிக் கொள்ளலாம் என்று கூறுகிறுர்கள். அரசாங்கம் இச்சேவையை உடனடியாகக் கவனிக்க வேண்டும். இதைவிட பொது வேலைப்பகுதி நடத்தும் பாதைச் சேவை போல் அரசாங்கமும் மோட்டார் வள்ளங்களை சேவையில் ஈடுபடுத்துமாயின் விபத்துக்களை தவிர்த்துக் கொள்ளலாம். பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்ட மீன்பிடி வள்ளங்களை பாவிப்பதும் ஆட்கள் பிரயாணம் செய்வதை கட்டுப்படுத்துவதும் செய்யாவிடின் எந்தச் சந்தர்ப்பத்திலும் விபத்து ஏற்படலாம். அரசாங்க அதிபர் இவ்விஷயத்தில் கூடிய கவனம் செலுத்தி ஆவன செய்வாரென நம்புகின்றேன்.

பி. சண்முகசாமி
கல்கமுவ.

0 0 0

**மூதூர்**

மூதூர்- திருமலை மோட்டார் படகுச் சேவையில் மாவட்ட அரசாங்க அதிபர் தமது நேரடியான கவனத்தைச் செலுத்த வேண்டியது அவசியம்.

மூதூர்-திருமலை மோட்டார் படகுச்சேவை தினமும் நடைபெறுகிறது. நாளுக்கு 8 தடவைகள் போவதும் வருவதுமாக படகுச்சேவை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த 1957ம் ஆண்டு பெரு வெள்ளத்தின் பின்னர் பஸ் சேவை துண்டிக்கப்பட்ட பிறகு படகுச் சேவை மூதூர் பகுதி பிரயாணிகளுக்கு அத்தியாவசிய பிரயாண சாதனமாய் இருக்கிறது.

தற்சமயம் படகுச்சேவைக்கு விடப்படும் படகுகளில் சில சிறியதாயும் அடிக்கடி இயந்திரக் கோளாறுகள் ஏற்படக கூடியனவாகவுமுள்ளன. சிறிய படகுகளில் கூடிய தொகையான பிரயாணிகள் பிரயாணம் செய்யும் சந்தர்ப்பம் உண்டாகுகின்றது. சில படகுகள் இயந்திரக் கோளாறு காரணமாய் இடைநடுவில் நின்றுவிடுவதும் அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சிகளாகும். ஆகவே சேவைக்கு விடப்படும் படகுகளின் அளவையும், அவற்றின் அமைப்புகளையும், மற்றும் இயந்திரத்தின் சக்தியையும் பரிசீலனை செய்து ஆவன செயவேண்டும். தற்சமயம் சேவையில் உள்ள 3 படகுகள் விஷயத்தில் அதிபர் பரிசீலனை நடத்துவதுஅவசியம். இவை சிறியன மற்றும் பாதுகாப்புக்கு உரிய சாதனங்களும் இங்கே கிடையாது.

பாலைதீவுச் சம்பவத்தை நினைவில் கொண்டு மூதூர்-திருமலை படகுச்சேவையில் உள்ள படகுகளின் அளவு, அமைப்பு இயந்திரசக்தி ஆகியவை பற்றி அதிபர் பரிசீலனை நடத்துவாரா?.

ஏ.தர்மராசா
மூதூர்

'மக்க்ள் ஆதரவு இருந்தால்தான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெற்றோம்.

அச்சுப்பதிவு: ஜோதிஷ ரத்னாகரநிலயம், மட்டு வில்.

விலை: ரூபா 2-00.

புராதன காலத்தில் இயற்றப்பட்ட வாக்கியங்களை திருத்தங்களில்லாமல் உபயோகித்துக் கணிப்பதால் ஏற்படும் கிரக நிலைகள் பிரத்தியட்சத்திற்குச் சரிவராமை கண்டே பிரத்தியட்சத்திற்குச் சரிவரக்கூடிய திருக்கணித முறைப்படி பஞ்சாங்கம் கணிப்பது ஆரம்பமானது. இவ்வாறு சிறப்பாகக் கணிக்கப்பட்ட இந்தத் திருக்கணித பஞ்சாங்கத்துக்குரிய அம்சங்கள் யாவும் ஒருங்கே யமைந்து காணப்படும் இத்திருக்கணித பஞ்சாங்கம் சோதிடர் உதவியின்றி எதிர்வரும்நமது புதுவருடப் பிறப்புக் கருமங்கள் நற்கருமங்களை ஆரம்பிக்கத் தகுதியான நேரங்காலங்கள் முதலியவற்றை கஷ்டமின்றி இலகுவாகத் தெரிந்து கொள்ள யாவருக்கும் உதவியளிப்பதாகவமைந்துள்ளது. குறிப்பாகச் சோதிடத் துறையினருக்கு இது அதிக பயனளிப்பதாகும்.

— 'குணம்'

## கூட்டுத்தாபனக் கப்பலுக்கு மீனவர் அஞ்சுகின்றனராம்

பச்சிலைப்பள்ளி, புதன்

பருத்தித்துறை, இன்பநட்டி, தாளையடி ஆகிய பகுதிகளிலிருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்க இயந்திர வள்ளத்தில் செல்லும் தொழிலாளர் மிகுந்த அச்சம் கொண்டுள்ளனர். இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பாரிய இழுவைக் கப்பல் ஒன்று இழுவை வலை மூலம் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டதே இதற்குக் காரணமாம்.

சென்ற வருடம் இது போன்ற ஒரு கப்பல் பல லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நைலோன் வலைகளைச் சேதமாக்கியதுடன் மீன் பிடிக்க வள்ளத்தில் சென்ற தகப்பனையும் மகனையும் தாக்கியுள்ளனர். இப்படியான சம்பவங்கள் இம்முறையும் நிகழலாமென மீனவர்கள் அச்சம் கொண்டுள்ளனர்.

## ஜனநாயகத்தை துர்ப்பிரயோகம் செய்யாதீர்கள்

— வ. ந. நவரத்தினம்

மட்டுவில், புதன்

'நாமே நம்மை ஆளுகிறோம் நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்என்று கூறக்கூடிய அளவிற்கு எமது நாட்டில் ஜனநாயகம் ஓங்குகிறது. இந்த நிலையிலே, நாம் நமதுஸ்தலஸ்தாபனங்களின் ஆட்சி நிலையை உயர்த்தி, வலுப்படுத்திக்கொண்டோமேயானல், நமதுநாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளுங்கள்என்று எமது ஸ்தலஸ்தாபன பிரதிநிதிகளைஉரிமையுடன்கேட்க முடியும். இந்த நிலை இருக்கும்போது நாம் ஏன் தென் இலங்கையிலிருந்து இங்கு வரும் அமைச்சர்களை மண்டியிட்டுக் கேட்கவேண்டும்.'

இவ்வாறு சாவகச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்ட பஸ்நிலையத்தை திறந்து வைத்துப்பேசிய சாவகச்சேரி முன்னாள் எம்.பி. திரு. வ. ந. நவரத்தினம்கூறினார். சாவகச்சேரி நகரசபைத் தலைவர் திரு சு கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது:-

'ஜனநாயகம் என்பது மக்களுக்கு அத்தியாவசியம் தேவையான விலைமதிப்பு உள்ள ஒருமாணிக்கம். இந்த ஜனநாயகத்தை காப்பாற்றிக்கொள்ளவேண்டியதுஇந்நாட்டுமக்களின் தலையாய கடன். இன்று, பாகிஸ்தான் செக்கோஸ்லவாக்கியா போன்ற நாடுகளை உதாரணமாக எடுத்துக்கொண்டால், அங்கு மக்கள் சுதந்திரம் என்ற நிலைக்கும் கனவுகாண வேண்டியநிலையில் இருக்கிறார்கள்.

மேற்குறிப்பிட்ட நாடுகளில்தான் மக்கள் ஜனநாயகத்தைதுஷ்பிரயோகம்செய்துள்ளனர். இதனுல் அவர்கள இன்று ஆட்டிப்படைக்கப்படுகிறார்கள" இந்த நிலை எமதுநாட்டில்ஏற்படவேண்டிய அவசியமே இல்லை.

இதே நிலையில் இந்நாட்டு மன்னர்களாகியநீங்கள் உங்கள் பொறுப்புக்களை உணரமறந்துவிடும் பொழுதுதான் நீங்கள் உங்கள் ஜனநாயகத்தை துஷ்பிரயோகம் செய்தவர்களாகிறீர்கள். எனவே இந்த நாட்டில் நாம் எமது ஸ்தலஸ்தாபன ஆட்சியை வலுப்படுத்தி எமது தேவையை நாமே பூர்த்திசெய்யுமளவிற்கு முன்னேறவேண்டுமே தவிர தென்னிலங்கை அமைச்சர்களிடம் மண்டியிடுமளவிற்கு இருக்கக்கூடாது என்றார்.

அடுத்து இலங்கை பிரயாணிகள் சங்க உறுப்பினர் வித்துவான் மு சபாரத்தினம் பேசுகையில், சாவகச்சேரி பஸ்சேவை குறைகளை எடுத்துக்கூறி இந்நிலை விரைவில் சீர்பெறும் என எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

அடுத்து வழக்கறிஞர் திரு வி கனகசபை, திரு எஸ் கே திரவியநாயகம்உட்படபலர் உரை நிகழ்த்தினர்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...வந்து இப்பொழுது பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளிலும் உலகத்தின்பிற நாடுகள் பலவற்றிலும் பின்பற்றப்படுகிறது. விஞ்ஞான உலகத்தில் இந்த முறையே முளுக்க முழுக்க பின்பற்றப்படுகிறது.

அங்குலத்தை அடி, யார், சங்கிலி, பர்லாங்கு, மைல் என்று மாற்றுவதற்கும், அவுன்ஸை ருத்தல், துலாம் அந்தர், தொன் ஆக்குவதற்கும் எத்தனை பெருக்கல், பிரித்தல், கூட்டல், கழித்தல்களை செய்து மண்டையைப்போட்டு அடித்துக்கொள்கிறோம். பள்ளிக்கூடத்தில் வாத்தியாரிடம் எத்தனை 'பிரப்பம்பழம்' வாங்கியிருப்போம். இந்தக்கரைச்சல் ஒன்றுப் மீட்றிக் முறையில் உண்டாகாது. 12345 மீட்டரில் 12 கிலோமீட்டர் 3 சதமீட்டர், 4 தசமீட்டர், 5 மீட்டர் இருக்கிறதென்று சுலபமாக கூறிவிடலாம்.

மீட்றிக்முறை வருவதற்கு முன்பு அளவு முறைகளில் உலகமெங்கும் ஒரே குளறுபடியாயிருந்தது. நீட்டல் அளவையில் சாண் முழம், பாகம் என்றும் நிறுத்தல் அளவையில் சேர், சுண்டு, ஆழாக்கு என்றும் பரப்பளவையில், குழி, காணி, வேலி என்றும் நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் பலவிதமான கணக்குகள் இருந்தன, மாணவருக்கும், வியாபாரிகளுக்கும் கணக்கப்பிள்ளைகளுக்...

...கடத்த... வழக்கொன்றில் சாட்சியமளித்த 16 வயது பள்ளி மாணவி பரமேஸ்வரி கூறினார்.

இந்த வழக்கில் மீசாலை வடக்கைச் சேர்ந்த செல்வி பரமேஸ்வரி சின்னத்தம்பி என்ற16 வயது யுவதியை, பாடசாலையால் வரும்போது காரில் கடத்த முயன்றதாக, அதே ஊரைச் சேர்ந்த ஐயம்பிள்ளை தம்பிஐயா, வேலன் விஞசித்தம்பி, சின்னத்தம்பி செல்லத்துரை ஆகிய மூவர் மீது சாவகச்சேரிப் பொலிசார் குற்றம்சாட்டியிருந்தனர்.

கடந்த 13-ம் திகதி ஜனவரிமாதம் நான் மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலையில் மாணவியாக இருந்தேன். அன்று மாலை 3-30 மணியளவில் பாடசாலையிலிருந்து, என் சகமாணவியான கண்மணியுடனும், ஆசிரியை தவமணியுடனும் பாடசாலையால் வீடு நோக்கிப் புத்தூர் ரேட்டால் போய்க்கொண்டிருந்தோம்.

அப்பொழுது ஒரு மோட்டார் கார் எம்மைத்தாண்டி வெகு வேகமாகச் சென்றது.

...திறபட்டது. நான் பொ... தென்று நிலத்தில் விழுந்தேன்.

உடனே அவர்கள் ஓடிவிட்டார்கள். எனக்கு முழங்காலில் பெரிய இரத்தக் காயம் ஏற்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் என் அக்கா தவமணிக்கும் 3-ம் எதிரி செல்லத்துரைக்கும் திருமணம் நிச்சயித்து நடைபெறுவதற்கான ஒழுங்குகள் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது. திடீரென என் அக்கா தவமணி எங்கள் முறை மைத்துனர் ஒருவருடன் ஓடிவிட்டார். இதைத் தொடர்ந்தே பழிவாங்கும் நோக்கமாக மூன்றும் எதிரி என்னை கடத்த முயன்றிருக்கலாம் என்றும் கூறினார்.

சாட்சிதரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பி. மயில்வாகனம் ஆஜரானார். வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்தார்.

மாஜிஸ்திரேட் இம்மாதம் 29-ம் திகதிவரை விசாரணையைஒத்திவைத்து எதிரிகள் மூவரையும் தலா 1000 ரூபா பிணையிற் செல்லும்படி உத்தரவிட்டார்.

கொடிகாமம் பஸ் சாரதி கொலை வழக்கு

## பலத்த பாதுகாப்புடன் சந்தேக நபர் ஆஜர்

கொடிகாமம், புதன்

கொடிகாமம் பஸ் சாரதி கொலை சம்பந்தமாக ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் மூவரும், நேற்று பலத்த பாதுகாப்புடன் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டிற்கு கொண்டுவரப்பட்டனர்,

சந்தேகநபர்களான தம்பிமுத்து கணேசமூர்த்தி. சின்னத்தம்பி திரவியநாயகம், முருகேசு கணேசமூர்த்தி ஆகிய மூவரும் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் விசாரணையை ஏப்ரல் மாதம் 8ம் திகதிக்கு ஒத்திவைத்தார். 'விசாரணையை பார்ப்பதற்காக கோட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

## கார் கைப்பற்றப்பட்டது: விசாரணை தொடர்கிறது

கொடிகாமம் புதன்

கொடிகாமம் பஸ் சாரதி கொலைசம்பந்தமாக பொலிசார் இன்று காலை கார் ஒன்றைக் கைப்பற்றியுள்ளார்கள். சம்பவம் நடந்ததினம் இக் கார் கொடிகாமத்தில் காணப்பட்டதாக கூறப்படுகிறது.

பொலிசாரின் விசாரணைக்கு கொடிகாமப் பகுதியைச் சேர்ந்த சிலர் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஆயுதம் தாங்கிய பொலிசார் இரவில் ரோந்துசுற்றி வருகின்றனர், இப்பகுதியில் இன்னும் அச்சம்நிலவி வருகிறது

இக்கொலை சம்பந்தமாக பொலிசார் தொடர்ந்து புலன்விசாரணை செய்துவருகின்றனர்,

பொலிஸ் பிரிவு தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

## உதவி ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை உதவியாசிரியர் சங்கம் என்னும் பெயரில் புதிய ஆசிரியர் சங்கம் ஒன்று உதயமாகவிருக்கிறது. சாதி, மத. மொழி வேறுபாடற்றமுறையில் இச் சங்கம் இயங்கும் என்றும் உதவி ஆசிரியர்களின் நலன்களைப்பாதுகாப்பதற்கு இது உழைக்குமென்றும் காரியதரிசி திரு. ஆ. மார்ட்டின் தெரிவித்தார்.

இதற்கான ஆலோசனைக் கூட்டமொன்றும் வருகிற 4-ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது, மலாயன் கபே மேல்மாடியில் நடைபெறும் இக்கூட்டத்துக்கு திரு கு. செல்லத்துரை தலைமை வகிப்பார்.

## நூல்தட்டுப்பாடு இருக்காது

கோட்டை. புதன்

தேசிய புடவைக் கூட்டுஸ்தாபனம் நாட்டின் நெசவுத் தொழிலுக்குத் தேவையான நூல் போதியளவு கையிருப்பில் உள்ளதாக அறிவித்துள்ளது.

வருடாந்த நிலுவைகணக்கெடுப்புக்காக நூல்கள் கூட்டுஸ்தாபனத்தில் உள்ளதாகவும் இம்மாதம் 7-ம் திகதி தொடக்கம் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுமெனவும் கூட்டுஸ்தாபன அதிபர் தெரிவிக்கிறார்.

## பொறுப்பான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் உள்ளன: பல்லாயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன: அவற்றின் முடிவுகள் இன்னும் தெரிந்தில:

பதவி உயர்வை எதிர்பார்க்கின்ற ஆசிரியர்களுக்கு வெற்றிடங்களின் தொகை என்ன? எந்த அடிப்படையில் அவை நிரப்பப்படவுள்ளன பற்றிய தகவலைக் கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும்: பிற சேவைகளில் இம்முறை அனுட்டிக்கப்படுகிறது வெற்றிடங்களைத் தகுந்த முறையில் நிரப்பாது ஏனோதானோ என்ற முறையில் சில பதவிகளை மட்டும் வழங்கிவரும்நிலையால் ஆசிரியர் மத்தியில் மனக்கசப்பு உருவாகியுள்ளது.

...தர்ப்பத்திலும் விபத்து ஏற்படலாம். அரசாங்க அதிபர் இவ்விஷயத்தில் கூடிய கவ...

...சிலனை நடத்துவாரா?.

ஏ.தர்மராசா

மூதூர்

## 'மக்க்ள் ஆதரவு இருந்தால்தான் அரசாங்கம் உதவி செய்யும்'

சுழிபுரம், புதன்

பொதுமக்கள் சகலதபால் கருமங்களையும் தத்தமது கிராமத்திலுள்ள தபால் கந்தோர்மூலம்செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் கந்தோர்கள் வளர்ச்சியடைய முடியும். பொதுமக்களின் ஆதரவும் உதவியும் இல்லாதுபோனல்சகல கருமங்களும் வளர்ச்சியடைய மாட்டாது. மக்களின் ஆதரவைக்கொண்டே அரசாங்கம்உதவி செய்யும். இன்று திறக்கப்படும் தபால் கந்தோர் விரைவில் முதல்தரமான கந்தோராகவும் சகல காரியங்களும் நடைபெறக்கூடியதாகவும் திகழ வேண்டும்,

இவ்வாறு பண்டத்தரிப்பு பகுதியிலுள்ள புதிய பிராம்பத்தை உபதபால் நிலையத்தை திறந்துவைத்துப் பேசிய வடமாநில தபால் அதிகாரி திரு எம் நடராசா குறிப்பிட்டார்.

கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் தா சு. துரைராசா விழாவுக்கு தலைமை வகித்தார், முன்னாள்வட்டுக்கோட்டை எம், பி, திரு அ அமிர்தலிங்கம் பேசுகையில் நான் எனது பதவிக்காலத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சகல மக்களுக்கும் சாதி, மத, சமூக வித்தியாசம் இல்லாமல் கடமையாற்றியுள்ளேன். கிராமத்தவர்களால் வேண்டப்பெற்ற உதவிகளை தடையின்றி பெற்றுக் கொடுத்துள்ளேன், இன்று திறக்கப்பட்டுள்ள இப்புதிய தபால் நிலையத்தை இந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்திலேயே திறக்க வேண்டும் என முயற்சி செய்தேன்என்றூர்,

திரு இ. செல்வரத்தினம் (தலைவர் பண்டத்தரிப்புப்பட்டினசபை) திரு த, தம்பித்துரை ஜே. பி, திரு எஸ் செல்லத்துரை திரு கே வேலாயுதம், திரு சி ஏ நவரத்தினசிங்கம் கலைமணி க தெய்வேந்திரம் ஆகியோா உட்பட மற்றும்பலர் பேசினர் உப அஞ்சல் நிலைய அதிபர் திரு க கந்தசாமிநன்றியுரை கூறினர்,

## 22 புதிய கிராம வங்கிகள் நிறுவப்படும்

கோட்டை புதன்

இன்று இரு புதிய கிராம வங்கிகள் பன்னகமுவ, பன்வில்ல ஆகிய இரு கிராமங்களிலும் இயங்க ஆரம்பிக்கின்றன. இந்த இருவங்கிகளோடு எல்லாமாக நாட்டில் இன்று 82 கிராம வங்கிகள் இயங்குகின்றன. இவற்றைவிட நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் 23 புதிய கிராம வங்கிகள் நிறுவப்படவுள்ளன.

மக்கள் வங்கியின்கீழ்இயங்கும் இந்த கிராம வங்கிகள் விவசாயிகளின் நலன்கருதி நிறுவப்பட்டுள்ளன எனவும் விவசாயிகள் தங்கள் விவசாயத்தின் மூலம் பெறும் வருவாயில் சேமிப்பு செய்து கொளவதற்கும் தங்கள விவசாயத்தைப் பெருக்க இவ்வங்கிகளில் நிதிவசதி பெறவும் இவ்வங்கிகள் உதவியாகவிருக்கும்எனவும் வங்கி அதிபர் திரு. டொனல்ட் கன்னங்கரா தெரிவித்துள்ளார்.



## மரண அறிவித்தல்

சுவாம்பிள்ளை இராயப்பு (அப்பையா)

சாவகச்சேரி சுவாம்பிள்ளை இராயப்பு காலமாகிவிட்டார். இவர் சவுரியம்மாவின் அன்புக் கணவரும் ஆசீர்வாதம், மரியதாஸ், சிங்கராசா, அல்போன்ஸ (நகரசபை சாவகச்சேரி) வேலுப்பிள்ளை மரியம்மா ஆகியோரின் தந்தையும், ஏபிரகாம்பிள்ளை, திருமதி மரியாம்பிள்ளை, திருமதி மனுவல்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவர். அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி அர்ச் லிகோரியார் கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை நண்பர்களும் உறவினர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

2101


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org